# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 தை 24 வெள்ளிக்கிழமை (06-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 61


முச்சந்தி முரளி



அப்ப நாடகம் கச்சிதமாய் அரங்கேறியிருக்கு எண்டு சொல்லுங்கோ...... !

# கிளிநொச்சியின் தெற்கு, மேற்கு பகுதியில் விமானங்கள் குண்டுவீச்சு

## புதனன்று நிகழ்ந்த மோதலில் படையினரின் டாங்கி சேதம்

கொழும்பு, பெப். 6

கடந்த சில நாள்களாக போர்க்களமாக மாறி உள்ள கிளிநொச்சிப் பகுதியில் விமானங்கள் நேற்று குண்டு வீச்சு நடத்தின. கிளிநொச்சியின் தெற்கு, மேற்கு பகுதிகளில் உள்ள புலிகளின் முக்கிய நிலைகள் மீது இந்த விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் தெரிவித்தது.

காட்டுப் பகுதியில் புலிகளின் மோட்டார் ஷெல் ஏவும் நிலை ஒன்றைத் தாக்கி இருப்பதாகவும் விடுதலைப் புலிகள் பலர் இத் தாக்குதலில் கொல்லப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு உட்பட்ட கிளிநொச்சி, பரந்தன் பிரதேசங்கள் படையினரின் முழுக்கட்டுப்பட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி றொஹான் தளுவத்த தெரிவித்தார்.

இதற்கிடையில் கிளிநொச்சிக்கு வடக்குப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் கடும் மோதல் இடம்பெற்றதாகவும் —

இதில் இராணுவ தரப்பில் பலர் கொல்லப்பட்டதோடு, பலர் காயங்களுக்கும் உள்ளானார்கள் என்றும் —

இராணுவத்தினரின் யுத்த (9 ஆம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் சட்டங்களை மீறாத வரை புலிகளைத் தடை செய்ய முடியாது!

## யாழ். மணிக்கூண்டுக் கோபுர நிதி கையளிப்பில் பிரிட்டிஷ் தூதர் கருத்து

கொழும்பு, பெப்ரவரி 6

"லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகத்தை மூடுமாறு பிரிட்டன் மீது இலங்கை மீண்டும் அழுத்தம் கொடுத்து வருகிறது. ஆனால் புலிகள் பிரிட்டிஷ் சட்டத்தை மீறி விட்டார்கள் என்று நிருபிக்கப்படும் வரை அவர்களை தடை செய்வது கடினமாக இருக்கும்."

இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் ஹதீதம் மேற்கண்டவாறு கூறினர்.

போரினால் சேதமடைந்துள்ள யாழ். மணிக்கூண்டுக் கோபுரத்தைத் திருத்துவதற்காகப் பிரிட்டிஷ் அரசு 10 ஆயிரம் ஸ்ரேர்லிங் பவுண்ஸ்களை அன்பளிப்பாக வழங்கியது.

இது தொடர்பாக கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் நேற்று நடைபெற்ற வைபவத்திலேயே பிரிட்டிஷ் (9 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளை உள்ளே வரவிட்டு தாக்கியதாக தளுவத்த தெரிவிப்பு

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளை தந்திரமான முறையில் பாதுகாப்பு எல்லைக்குள் வர விட்டுத் தாக்கியதால் அவர்களுக்கு பாரிய இழப்பை ஏற்படுத்த முடிந்தது.

மேற்கண்டவாறு இராணுவத் தளபதி றொஹான் தளுவத்த தெரிவித்தார்.

கிளிநொச்சிப் பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதாக சில தொடர்புச் சாதனங்கள் வெளியிட்ட தகவல் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், தேடுதல் நடவடிக்கைகளின் பின்னர் பாதுகாப்பு வலயம் முன்னரைவிட பலப்படுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

உறுதியுடன் முன்னேறிச் செல்லும் வெற்றி உறுதி படையினர் விடுதலைப் புலிகளின் முக்கிய தளம் எனக் கருதப்படும் இடத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகவும் மிக விரைவில் அதனைக் கைப்பற்றி விடுவர் என்றும் இராணுவத் தளபதி நம்பிக்கை தெரிவித்தார். [இ-7]

## சுதந்திர பொன்விழா தினத்தில் சுவிஸில் தமிழர் ஆர்ப்பாட்ட பேரணி

### கண்டனக் கூட்டத்தில் சுவிஸ் எம்.பிக்களும்

யாழ்ப்பாணம், பெப். 6

சுவிட்சர்லாந்தில் வாழும் தமிழ்மக்கள் அங்குமாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று முன்தினம் நடத்தினர்.

சுதந்திர பொன்விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த பேரணி நடத்தப்பட்டது.

பேரணி முடிவில் நடத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில் சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், அரசசார்பற்ற அமைப்புபிரதிநிதிகளும் உரையாற்றினர்.

பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய இடங்களிலும் பேரணிகள் நடத்தப்பட்டன.

லண்டனில் பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலத்தின் முன்பாக நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் விழிப்புணர்வுப் போராட்டம் நடத்தினர். (இ-3)

## அனுருத்த கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்

### சட்டப்பிரச்சினை இல்லை எனத் தெரிவிப்பு

அனுருத்த ரத்வத்த நேற்று வியாழன் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் தமது அலுவலகத்திற்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

தமது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளாத காரணத்தால் சட்டப்பிரச்சினைகளுக்கு இடமில்லை என்றும் —

சட்டமா அதிபரினதும், நீதி அமைச்சரினதும் சட்ட ஆலோசனைக்கிணங்க புதிதாக சத்தியப் பிரமாணம் செய்யத் தேவை இல்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

## 5 லட்சம் தோட்டத் தொழிலாளர் நேற்று முதல் வேலை நிறுத்தம்

### சம்பள உயர்வு கிட்டும் வரை தொடரும் என அறிவிப்பு

கொழும்பு, பெப். 6

தேயிலை, றப்பர் தோட்டங்களில் பணிபுரியும் 5 லட்சத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தமது நாளாந்த சம்பளத்தை 105 ரூபாவாக அதிகரிக்கக் கோரி நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

இந்த வேலை நிறுத்தம் காரணமாகச் சகல தோட்டங்களிலும் வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்தன என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

தொழில் கொள்வோர் சம்மேளனத்துக்கும், பெருந்தோட்ட நிறுவனப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்கள் முறிவடைந்ததை அடுத்தே தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர். ( 9ஆம் பக்கம் பார்க்க)

## கிருஷாந்தி கொலை வழக்கில் சுய விருப்பத்தின் பேரிலேயே வாக்குமூலம் எனத் தீர்ப்பு

கொழும்பு, பெப். 6

சுண்டுக்குளி மகளிர்கல்லூரி மாணவி கிருஷாந்தி மற்றும் மூவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒன்பது படையினரும் இரு பொலீஸாரும் வழங்கியிருந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அவர்களின் சுயவிருப்பின் பேரில் வழங்கப்பட்டது என்று கொழும்பு மேல் நீதிமன்ற மூன்று நீதியரசர்கள் நேற்றுத் தீர்ப்பு வழங்கினர்.

9 படையினர் மற்றும் ( 9 ஆம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரனின் பூதவுடலுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப். 6

கடந்த இரண்டாம் திகதி கொழும்பில் காலமான யாழ். பல்கலைக் கழக முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி ( 9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நவமணி யோண்பிள்ளை தைரியர்

யாழ்ப்பாணம், இல: 18/4 மாட்டீன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கனடாவில் வசித்து வந்த திருமதி நவமணி யோண்பிள்ளை தைரியர் 02—02—98 (திங்கட்கிழமை) அன்று கனடாவில் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற யோண்பிள்ளை தைரியரின் அன்பு மனைவியும், றொபின்சன், பேள், ஜெஸ்மின், சேலின், விக்டரின், கிரிசன், லில்லியன், ரெமிசன் ஆகியோரின் அன்புத்தாயாரும், லூட்ஸ், சாமிநாதர், டெஸ்மன்ட், சுரேந்திரன், சிறிசுந்தராஜா, நளினி, சிலோட், யஸ்மின் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்கம் 07—02—98 அன்று கனடாவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:
திருமதி பேள் சாமிநாதர்
(மகள்)

18/4, மாட்டீன் வீதி,
யாழ்ப்பாணம்

(53135)

## சின்னையா ஆறுமுகம்

"கோகுலம்" கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், திருகோணமலையில் வசித்தவருமான ஓய்வு பெற்ற பொலீஸ் உத்தியோகத்தர் சின்னையா ஆறுமுகம் 04-02-1998 இல் திருகோணமலையில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற உலகநாயகியின் அன்புக் கணவரும், ஒப்பிலாமணி (பிராந்திய முகாமையாளர், உப்புக்கூட்டுத்தாபனம் புத்தளம்), கலாநிதி ஆனந்தராஜா (பொறியியலாளர் London), கலாநிதி ஸ்கந்தராஜா (பொறியியலாளர் அமெரிக்கா), சிவராசா (பொறியியலாளர் இலங்கைமின்சாரசபைகொழும்பு), திருமதி குமுதம் தவனேஸ்வரன் (திருகோணமலை), தில்லைநடராஜா (தில்லை Vision கொழும்பு), ஆகியோரின் தந்தையாரும், புஸ்பராணி, தவனேஸ்வரி, கிருபாவதி, Doctor பாமினி (கழபோவில), அல்லி (யாழ். பல்கலைக்கழகம்), தவனேஸ்வரன் (பிரதம பொறியியலாளர் திருகோணமலை) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற ஆ. சிவபாதம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா (ஆசிரியர்), சின்னத்தம்பி, வேலுப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார் அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நேற்று 05-02-1998 இல் பி.ப. 2 00 மணியளவில் "ராஜவரோதயம்" வீதி, திருகோணமலையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. இரகுநாதன்
(பேறாமகன்)

"கோகுலம்"
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

(53131)

## வல்லிபுரம் தவராசா

(லிகிதர் – மரக்கூட்டுத்தாபனம்)

புலோலி தெற்கு, கொடிகாமம் வீதியைச் சேர்ந்த வல்லிபுரம் தவராசா 5-2-98 இல் காலமானார்.

இவர் காலஞ் சென்ற வல்லிபுரம் (ஓ—லி) தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், இந்துமதியின் அன்புக் கணவரும், தம்பிமுத்து பாப்பம்மா தம்பதிகளின் மருமகனும், விக்னேஸ்வரனின் அன்புத் தம்பியும், யோகேஸ்வரனின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-2-98) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இந்துமதி தவரார்சா
(மனைவி)

(53161)

## அந்தோனிப்பிள்ளை தேவதாஸ்
## (அன்ரன்)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை தேவதாஸ் (அன்ரன்) 5-2-98 காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற சகாயமேரியின் அன்புக்கணவரும், அனுதர்சினி, அனுதர்ஷன், பிரியதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. பர்ணாந்து அந்தோனிப்பிள்ளை, காலஞ்சென்ற அருளம்மா ஆகியோரின் அன்பு மகனும், திரு. திருமதி சிங்கராஜா, நீற்றம்மா (சாரையடி- புலோலி) ஆகியோரின் மருமகனும், அருள்தாஸ் (கனடா), மேரிராணி (இந்தியா), விமலதாஸ் (ஜேர்மனி), மேரியசிந்தா, செபரட்ணதாஸ் (கொமேசல் வங்கி, யாழ்ப்பாணம்), யூலியன், ஜீவதாஸ் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரருமாவார் அன்னாரின் நல்லடக்கம் சனிக்கிழமை (7-2-98) பி. ப. 3 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. செபரட்ணதாஸ்

இல 10, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(53140)

# JAFFNA COLLEGE
## Institute of Technology - Jaffna Branch

**COMPUTER CLASSES**

1. **Australian Computer Society [A C S]:**
   (Our Courses lead You to the Australian Cumputer Society Examination.)
2. **Diploma Course**
   Diploma In Computer Programming & Data Processing
   (One Year Full - Time Course)
3. **Certificate Courses:**
   a) C ++ b) Pascal Lenguage
   c) Dbase III + d) Lotus 1 2 3

**Educational Qualification:**
G. C. E (O/L) With Maths & English

Note:
மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிகள் அனைத்தும் யாழ். மருத்துவமனை முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்பு நிறுவனத்தில் நடைபெறும்.

மேற்குறிக்கப்பட்டுள்ள பாடநெறிகளுக்கு சிறந்த பல்கலைக்கழக பாடவிதானவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

விவரங்களுக்கு:-

### யாழ்ப்பாணக் கல்லூரி,
வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையம்,
464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(தமிழ் மூலம்) வட்டுக்கோட்டையில் மட்டும் நடத்தப்படும்'

1. **Automobile Technology** (1 Year)
   G. C E. (O/L) 5 Subjects
   a) Water Pump/Generator Repairing (6 Months)
   (நீர் இயந்திரம் / மின்பிறப்பாக்கி திருத்துதல் பராமரிப்பு)
   b) Motor Cycle Repairing (6 Months)
2. **Electrical wjring & Installation Practice** (1 Year)
   (மின் இணைப்பும் நிர்மாணமும்)
3. **Welding and Fitting Practice** (1 Year)
   (உலோக ஒட்டுனர், பொருத்துனர் பயிற்சி)

கல்வித் தகைமை:
க. பொ. த. (சா/த) வரை படித்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம்:
விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணக் கல்லூரி காரியாலயத்திலும், எமது யாழ்ப்பாணக் கல்லூரி வெளிவாரிப் பட்டப்படிப்பு நிலையக் காரியாலயத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 14-02-1998
நேர்முகப் பரீட்சை, பயிற்சி நெறிகள் ஆரம்பம்: 16-02-1998

(சி/2818)

# பொருளியற் கல்லூரி

(முன்னைய College of Commerce நிறுவனத்தில்)
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

பொருளியல் - S. வரதராஜன்
ஆரம்பம்: 07-02-1998 காலை 8.00 மணி

| | | |
|---|---|---|
| A/L | 98 | பகுதி I மீட்டல் வினாவிடை<br>பகுதி II பாடத்திட்டம் [சென்மதிநிலுவை] |
| A/L | 99 | கேள்விக் கோட்பாடு |
| A/L | 2,000 | பொருளியல் ஓர் அறிமுகம் |
| A/L | 97 | DAY CLASS<br>ஆரம்பம்: 09.02.98 திங்கள் 10.00 a,m |

அனைத்து மாணவர்களும் கற்பதற்கு வாய்ப்பளிக்குமுகமாக ஒவ்வோர் ஆண்டிற்கும் பல பிரிவுகள் ஆரம்பமாக உள்ளன. நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(49948)

# 1st in Com. G. A. Q. 98/99

யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி)

புதிய பிரிவு ஆரம்பம் 07 - 02 - 98
B. A. PART I ஆரம்பம்: 07 - 02 - 98

## G. A. Q. (பேராதனை) 99

- ★ A/L இல் 180 புள்ளிகளுக்குக் குறையாமல் பெற்றுக்கொண்ட (கலை. வர்த்தக, விஞ்ஞான) அனைவரும் விண்ணப்பிக்கலாம்.
- ★ இதற்காக பேராதனைப் பல்கலைக்கழகம் விண்ணப்பங்கள் கோரியுள்ளது.
- ★ பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.
- ★ விரிவுரைகள் ஆரம்பம்: 07 — 02 — 98.

விவரங்களுக்கு:

S. அருள்நங்கை,
**புதிய உயர் கல்லூரி,**
ஆரியகுளம்சந்தி, யாழ்ப்பாணம்.

(49948)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கப் படைபலம் வளைகுடாவில் அதிகரிப்பு!

## 3 ஆவது போர்க் கப்பல் விரைவு

வாஷிங்டன், பெப். 6

ஈராக் நெருக்கடிக்கு சமாதானத் தீர்வு காணும் முயற்சிகள் ஒரு புறம் மும்முரமாக நடந்து கொண்டிருக்க, மறுபுறம் வளை குடாவில் அமெரிக்கா தனது படை பலத்தைப் பெருக்கி வருகின்றது.

அமெரிக்கக் கடற்படையின் மூன்றாவது பெரிய விமானம் தாங்கிக் கப்பலான "யு.எஸ்.எப். இண்டிப்பென்டன்ற்" நேற்று வளைகுடாவைச் சென்றடைந்தது.

6 ஆயிரம் கடற்படை வீரர்களையும், 50 தாக்குதல் விமானங்களையும் கொண்ட இக்கப்பல் ஏற்கனவே வளைகுடாவில் நிலை கொண்டுள்ள பிரமாண்டமான விமானம் தாங்கிக் கப்பல்களான ''ஜோர்ஜ் வாஷிங்டன்'' ''நிமிட்ஸ்'' ஆகிய கப்பல்களுடன் இணைந்து கொள்ளும்.

கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த வளைகுடா யுத்தத்தின் பின்னர் இந்த வட்டாரத்தில் அமெரிக்கப் படைகள் பெருமளவில் குவிக்கப்பட்டிருப்பது இப்போதுதான் முதன் முறையாகும். தமது நாடுகளின் வாயிலில் மிகப் பெரிய படைபலம் நிறுத்தப்பட்டிருப்பதால் அதிருப்தி அடைந்துள்ளதாக ஈரானும், அரேபிய நாடுகள் சிலவும் குரல் எழுப்பியுள்ளன. ஆனால் ஈராக்கின் மீது அழிவை ஏற்படுத்தும் நீடித்த தாக்குதல் ஒன்றை தம்மால் நடத்த முடியும் என்று அதிபர் சதாம் ஹுசேய்னுக்குப் புரிய வைக்க அமெரிக்கா ஆவலாக இருப்பது தெரிகிறது என்று வளைகுடாவில் உள்ள செய்தியாளர் ஒருவர் கூறியுள்ளார்.

வளைகுடாவில் சர்வதேச கடற்பரப்பில் நிறுத்தப்பட்டிருக்கும் விமானம் தாங்கிக் கப்பல்களில் இருந்துதான் ஈராக்கிய இலக்குகளைத் தாக்கும் விமானங்களையும், செய்மதியின் உதவியுடன் இயங்கும் ஏவுகணைகளைச் செலுத்துவதிலும் அமெரிக்கா தயாராகி வருகிறது.

பதுங்கு குழிகளைத் தாக்கி அழிக்க விசேடமாக வடிவமைக்கப்பட்ட குண்டுகள் இக் கப்பல்களில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தாக்குதல் இலக்கை அதி உயர்ந்த வெப்பத்தால் அழித் தொழித்து விடும் நவீன ஆயுதம் ஒன்றையும் அமெரிக்கா தயாரித்துள்ளதாகவும் இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

ஈராக் நெருக்கடி

# உலகப் போராக வெடிக்கும் ஆபத்து!

## ரஷ்ய அதிபர் எச்சரிக்கை

மொஸ்கோ, பெப். 6

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் ஈராக் மீதான நடவடிக்கைகள் உலகப் போருக்கு வழி வகுக்கும் ஆபத்து இருப்பதாக ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ட்சின் எச்சரித்திருக்கிறார்.

அமெரிக்கா வசம் உள்ள அழிவு ஆயுதங்களை கிளின்ரன் அவதானமாகக் கையாள வேண்டும்: விமானங்களில் குண்டுகளை ஏற்றிச் சென்று வெளிநாடுகளை அச்சுறுத்தக் கூடாது என்றும் அதிபர் யெல்ட்சின் மேலும் கூறினார்.

ரஷ்ய அதிபரின் இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து இந்திய பங்குச்சந்தையில் நேற்று முன்தினம் வீழ்ச்சி காணப்பட்டதாக ஏ.எப்.பி செய்தி தெரிவித்தது.

இதேவேளை — ஈராக் மீது தாக்குதல் நடத்த ஐ.நா. பாதுகாப்புச் சபையின் அனுமதியை அமெரிக்கா கோரினால் ரஷ்யா தனது 'வீற்றோ' அதிகாரத்தின் மூலம் அதனைத் தடுத்து நிறுத்தும் என்று மொஸ்கோ தெரிவித்துள்ளது.

(ஐ)

# அதிபரின் 8 மாளிகைகளில் சோதனை நடத்த ஈராக் அனுமதி

கெய்ரோ, பெப். 6

அதிபர் சதாம் ஹுசேய்னின் எட்டு மாளிகைகளை சர்வதேச சோதனைக்குத் திறந்துவிட ஈராக் இணங்கியுள்ளதாக எகிப்து தெரிவித்துள்ளது.

ஈராக்கிய வெளிவிவகார அமைச்சர் தொலைபேசி மூலம் இந்த இணக்கத்தை தெரிவித்ததாக எகிப்திய வெளிவிவகார அமைச்சர் அமிர் மூஸா தெரிவித்தார்.

அதிபரின் மாளிகைகளில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளனவா என்பதைக் கண்டறிய சர்வதேச சோதனைக் குழுவுக்கு அவற்றை ஒருமாத காலத்துக்கு திறந்துவிட ஈராக் முன்வந்துள்ளதாக சி.

உலக அரங்கில்

என் என். செய்தி நிறுவனம் தெரிவித்தது.

ஈராக்கின் இந்த இணக்க நிலை குறித்து பக்தாத்தில் இருந்து உத்தியோக பூர்வ அறிவிப்பு எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை வெளியாகவில்லை.

(ஐ)

# அயோத்தியில் கோயில் அமைப்போம்; பாரதீய ஜனதாக் கட்சி வாக்குறுதி!

## முஸ்லிம் தலைவர்கள் கண்டனம்

புதுடில்லி, பெப் 6

அயோத்தியில் சர்ச்சைக்குரிய பாபர் மசூதி அமைந்திருந்த இடத்தில் இந்து ஆலயம் ஒன்றை அமைப்பதில் உறுதியாக இருப்பதாக இந்தியாவின் பிரதான எதிர்க் கட்சியும் தேர்தலில் பெரும்பான்மைப் பலம் பெறும் என எதிர்பார்க்கப்படும் கட்சியுமான பாரதீய ஜனதாக்கட்சி தனது தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சி தனது தேர்தல் அறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டது.

அயோத்தியில் இந்துக் கோயில் ஒன்றை அமைக்க சட்டபூர்வமான அனைத்து முயற்சிகளையும் எடுக்கப் போவதாக பாரதீய ஜனதாக் கட்சி அதில் தெரிவித்துள்ளது.

பி. ஜே. பி. யின் இந்த அறிவிப்பு இந்தியாவில் உள்ள 12 கோடி முஸ்லிம் மக்களுக்கு ஆத்திரத்தையும், பீதியையும் கொடுத்திருப்பதாக அவதானிகள் கூறியுள்ளனர்.

இந்தியாவின் மிகப்பெரிய மசூதியான புதுடில்லிஜும்மா மசூதியின் துணை இமாம் அஹமத் புஹாரி உட்பட ஏனைய இஸ்லாமிய தலைவர்கள் பலரும் பாரதீய ஜனதாவின் இந்த அறிக்கையை கண்டனம் செய்துள்ளனர்.

தேர்தல் அறிக்கை பாரதீய ஜனதாக் கட்சியின் உண்மையான தோற்றத்தைக் காட்டுவதாக அவர்கள் கூறியுள்ளனர்.

பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் பதவிக்கான வேட்பாளரான அடல் பிஹாரி வாஜ்பேய் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவத்துக்காக அண்மையில் வருத்தம் தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

1992 இல் பாரதீய ஜனதாக் கட்சியின் அழைப்பை ஏற்று உற்சாகம் கொண்ட இந்து அடிப்படைவாதக் கும்பல் ஒன்றினால் அயோத்தியில் அமைந்திருந்த பாபர் மசூதி கரசேவை மூலம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது.

[ஐ]

# ராஜீவ் கொலை வழக்கு தீர்ப்பில் உண்மைகள் மறைக்கப்பட்டுள்ளன

## நெடுமாறன் தெரிவிப்பு

சென்னை, பெப். 5

ராஜீவ் கொலை வழக்குத் தீர்ப்பில் பல உண்மைகள் மறைக்கப்பட்டு விட்டன என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ளார்.

இது குறித்து சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ராஜீவ் கொலையில் ஒரு நாடகம் திட்டமிட்டு நடந்தேறி விட்டது. பத்திரிகைகளுக்கும், பொதுமக்களுக்கும் தெரியாமல் விசாரணையும் ரகசியமாக நடத்தப்பட்டது. மூடுமந்திரமாக நடத்தப்பட்ட விசாரணைக்குத் தீர்ப்பும் வெளியாகிவிட்டது. இதில் பல உண்மைகள் மறைக்கப்பட்டு விட்டன.

விசாரணையின் முதல் நாலரை ஆண்டுகள் ஒரு நீதிபதி நடத்தினார். பிறகு விசாரணை நடத்திய நீதிபதி நவநீதன் பதினைந்து மாதங்கள் மட்டுமே விசாரணை நடத்தினார். கடைசி 3 மாதங்கள் தீர்ப்பு எழுதுவதற்காக எடுத்துக் கொண்டார். 5 ஆண்டுகளுக்கு மேல் நடைபெற்ற வழக்கின் மொத்த சாட்சிகள், வழக்கறிஞர்களின் குறுக்கு விசாரணைகள் ஆகியவற்றை மூன்று மாத அவகாசத்தில் முழுவதும் அவர் படித்திருக்க முடியாது.

இவ்வழக்கில் சந்திரசுவாமி மற்றும் அந்நிய சக்திகளும் சம்பந்தப்பட்டுள்ளனர். ஜெயின் கமிஷன் இறுதி அறிக்கை வெளியாவதற்கு முன்பே இத் தீர்ப்பு வெளியாகியுள்ளது. இது பல சந்தேகங்களுக்கு இடமளிக்கிறது.

உண்மையான குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நிரபராதிகள் தண்டிக்கப்படுவது நீதிக்குக் களங்கம் விளைவிக்கும் என்று நெடுமாறன் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

## சவுதிக்குத் தப்ப குவைத் மக்கள் முன் ஆயத்தம்

குவைத், பெப்.6

அமெரிக்கா ஈராக்கைத் தாக்கினால் அதன் மூலம் போர் மூழக்கூடும் என அஞ்சும் குவைத் மக்கள் சவுதி அரேபியாவுக்குத் தப்பிச் செல்ல வசதியாக தமது வாகனங்களுக்கு எரிபொருளை நிரப்பி வருகின்றனர் என ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

(ஐ)

## சோனியாவின் கூட்டத்தில் நெரிசல்; 15 பேர் காயம்

புதுடில்லி, பெப். 6

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் சோனியா காந்தி கலந்து கொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 15 பேர் காயமடைந்தனர்.

நகரில் உள்ள ஸ்ரேடியம் ஒன்றிலேயே இக்கூட்டம் நடைபெற்றது. வெளியேறும் வாசலில் ஏற்பட்ட நெரிசல் காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றது.

(ஐ)

★ மலிவு விலையில்

அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும்

லீலா கலண்டர்கள், டயறிகள்

★ மொத்தமாகப் பெற்றுக் கொள்வோருக்கும் வியாபாரிகளுக்கும் விசேட கழிவுகள்

கிடைக்குமிடங்கள்:

உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மொடேர்ண் ஸ்ரோர்ஸ்
பஸ் நிலையம்,
நெல்லியடி.

கரன் புக்சென்டர்
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேட்டு நிலப் பயிர்ச்செய்கை மழை இன்மையால் பாதிப்பு

சண்டிலிப்பாய், பெப். 6

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மேட்டு நில மரக்கறி செய்கையிலும், நெற் செய்கையிலும் ஈடுபட்டுள்ள மீளக்குடியேறியுள்ள விவசாயிகள் மழையின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்கள் தங்கள் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்குத் தேவையான மண்ணெண்ணையை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கும், அளவெட்டி-மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கும் மேலதிகமாக ஐந்து லோட் (33 ஆயிரம் லீற்றர்) மண்ணெண்ணையை விரைவில் விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்தினி அம்மா திலகநாயகம் பிராந்திய பெக்றோலியக் கூட்டுத்தாபன முகாமையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றில் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ-185)

## 9 ஊழியர்களுக்கு மீண்டும் வேலை

திருநெல்வேலி, பெப். 6

இடப் பெயர்வு காரணமாக வேலைஇழந்த 9 தபால் திணைக்கள ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் 11 93 இலக்கு சுற்றறிக்கையின் படி மேற்படி 9 ஊழியர்களுக்கும் மீண்டும் கடமையாற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## பெரியவிளான் தபாலகம்

சண்டிலிப்பாய், பெப். 6

பெரியவிளான் உப தபால் அலுவலகத்தை மீண்டும் திறப்பதற்கு யாழ் தபால் திணைக்களம் நடவடிக்கை மேற் கொண்டு வருகின்றது.

பெரியவிளான் கிராமத்தில் மக்கள் பெருமளவில் மீளக் குடியேறி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5-135)

## கோழிகளுக்கு தடுப்பு மருந்து

நல்லூர், பெப். 6

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் உள்ள கால்நடை வைத்தியசாலையில் இன்று காலை 9 மணிக்கு கோழிகளுக்கான நோய்த் தடுப்பு மருந்து வழங்கப்படும்.

பென்சிலின் குப்பி அளவு சிறிய போத்தல் கொண்டு வந்து மருந்தைப் பெற்றுக் கொள்ளுமாறு பதில் அத்தியட்சகர் தெரிவிக்கிறார்.

(ஐ-103)

## குடும்பஸ்தர் விடுவிப்பு

தென்மராட்சி, பெப் 9

கடந்த மாதம் 28 ஆம் திகதி ஆடுகள் மேய்க்கச் சென்றபோது படையினரால் அழைத்துச் செல்லப்பட்ட குடும்பஸ்தர் விடுவிக்கப்பட்டு வீடு திரும்பியுள்ளார்.

முகமாலை பொந்தர்குடியிருப்பைச் சேர்ந்த ஏகாம்பரம் கதிரமலை என்பவரே விடுவிக்கப்பட்டவராவார்.

(ஐ-117)

## எரிபொருள் நிலையம் திறக்கப்படும்

சண்டிலிப்பாய், பெப். 6

பண்டத்தரிப்பிலுள்ள எரிபொருள்நிரப்பு நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் பொருட்டு இதற்கான உபகரணங்கள், கருவிகள் திருத்தப்பட்டு வருகின்றன. திருத்த வேலைகள் முடிவடைந்ததும் இங்கு பெற்றோல், டீசல், மண்எண்ணெய் விநியோகம் நடைபெறும்.

(ஐ-135)

## சாரதி லைசென்ஸ்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். செயலக மோட்டார் வாகனப் பிரிவில் அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அலுவலக நாள்களில் தினமும் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணி வரை அனுமதிப் பத்திரம் வழங்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-5)

## கணித பாட செயலமர்வு

யாழ்ப்பாணம், பெப். 6

வடமராட்சி கணித மூலவள நிலையத்தில் நடத்தப்படும் கணிதபாடச் செயலமர்வு எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் ஜி சீ ஈ. சாதாரணதரப் பரீட்சை எடுத்த மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது இம் மாணவர்களுக்கு இவ்வாண்டுக்கான ஜி சீ ஈ. சாதாரணதரகணித பாடச் செயலமர்வு நடைபெறும் என்று கணித மூலவள நிலையப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

(ஐ-5)


**ZOOLOGY**
**A-LEVEL**
**Practice Questions Paper**

★ புதிய பாடத்திட்டத்துக்கமைய 10 வருட வினாத்தாள் M C. Q விடையுடன்

கிடைக்குமிடம்:-
பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ்நிலையம் முன்,
யாழ்ப்பாணம்.
(53138)



## தேவை

அனுபவம் உள்ள
பெண் தாதி தேவை
நேரில் தொடர்பு
கொள்ளவும்.

சோதி
வைத்தியசாலை
இல. 966,
பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(53136)



## முதலாவது பிறந்த தின வாழ்த்து



06-02-1998

செல்வன்
**வாகீஸ்வரக்குருக்கள் வதனீஸ்வரசர்மா**

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த
**பிரம்மஸ்ரீ**
சோ. வாகீஸ்வரக்குருக்கள் – காயத்திரி
தம்பதிகளின் செல்வப் புதல்வன்
**வதனீஸ்வரசர்மா**

தனது முதலாவது பிறந்த நாளை 06-02-1998 இன்று கந்தரோடையில் அமைந்துள்ள தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, கந்தரோடை தாத்தா, அம்மம்மா, புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த தாத்தா, அம்மம்மா, மாமா, சித்தி, காளிகோவிலடியில் வசிக்கும் பெரியமாமா, மாமி, ராஜு அண்ணா, ரமா அக்கா, கோப்பாயில் வசிக்கும் சின்னமாமா, மாமி, சுஜன் அண்ணா, தங்கை சுஸ்மிதா, தாவடியில் வசிக்கும் குட்டிமாமா, மாமி, கெஜன் அண்ணா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அருளானந்த விநாயகர் அருள்பெற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டுகாலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
ராஜீவன் ஐஸ்வரியா

கந்தரோடை,
சுன்னாகம்.
(சி/2811)



## மக்கள்வங்கிக் கிளை நவீன சந்தையில்

திருநெல்வேலி, பெப். 6

யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கி கட்டடத்தில் இயங்கி வந்த மக்கள் வங்கி காங்கேசன் துறை கிளை கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் யாழ். நவீன சந்தை மேல்மாடி கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ஐ-5-135)



## கண்ணீர் அஞ்சலி

எமது சமாச அங்கத்துவ சங்கமான
அளவெட்டி/ மல்லாகம் ப. நோ. கூ.
சங்கத்தின் தலைவரான,
**அமரர் க. ஜெகதீசன்**

அவர்களின் மறைவையொட்டி ஆன்னராது குடும்பத்தினருக்கும் அளவெட்டி/ மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

கூட்டுறவுச்சேவையிலுள்ள
தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.

யாழ். மா. வி. உ. நு. கூ. ச. சமாசம்,
111, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/ 2814)



## பாராட்டும் வாழ்த்தும்

யா/ வண்ணை நாவலர் ம. வி.
யாழ்ப்பாணம்.
5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை - 1997

| | | | |
|---|---|---|---|
| 1. | செ. ஜெசிந்தாயினி | — | 115 புள்ளி |
| 2. | த. சிவரூபி | — | 111 புள்ளி |
| 3. | த. விஜிதா | — | 104 புள்ளி |
| 4. | தி. சுரேக்கா | — | 103 புள்ளி |

இம் மாணவிகளையும், கற்பித்து ஊக்கமளித்த அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் யாவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

[53143]



சுழிபுரம் அருள்மிகு
## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான
## கும்பாபிஷேக தினம்

(மணவாளக்கோலம்)

நிகழும் ஈஸ்வர வருடம் தை மாதம் 25 ஆம் நாள் நாளை (7 - 2 - 1998) சனிக்கிழமை அம்பாளுக்கு காலை 9 00 மணிக்கு சங்காபிஷேகமும் (108) 12. 00 மணிக்கு விசேட பூசைகளும் நடைபெறும்.

மாலை 3. 30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று திருஊஞ்சல் பாடப்பெற்று அம்பாள் அன்னச்சப்பரத்தில் வீதி உலா வருவார்.

தேவஸ்தான பரிபாலன சபையினர்
(53084)



யாழ். கொழும்புத்துறை மேற்கு
சனசமூக நிலையம்

## வாழ்த்துகின்றோம்

எமது முன்னாள் தலைவரும்
தற்போதைய பொருளாளருமாகிய



சமூக ஜோதி
**திரு. கா. கணேசதாசன் J. P.**

சமாதான நீதிவானாக நியமனம் பெற்றுள்ளார்.
மனப்பூர்வமாக அவரை வாழ்த்துகின்றோம்.

நிர்வாகம்
கொழும்புத்துறை மேற்கு
சனசமூக நிலையம்,

(சி-2812)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீசாலைப் பகுதிக்கு மின் வழங்க புதிய ஜெனரேற்றர் இயக்கப்படும்

தென்மராட்சி, பெப். 6

மீசாலைப் பகுதிக்கு அடுத்த வாரத்தில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது. இதற்கென 100 கே. வி. சக்தி கொண்ட ஜெனரேற்றர் மீசாலை—புத்தூர்ச் சந்தியில் உள்ள வீடொன்றில் பொருத்தப்பட்டுள்ளது.

மீசாலைப் பகுதியில் தற்போது மின்சாரம் வழங்கப்படும் வீடுகளுடன் மேலும் 200 வீடுகளுக்கு இந்த ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தற்போது மீசாலை வடக்கு இராமாவில் பகுதியில் இயங்கும் 27 கே. வி சக்தி கொண்ட ஜெனரேற்றர் இம் மாத இறுதியில் பளைப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டு பளை நகர்ப் பகுதிக்கு அதன் மூலம் மின்சாரம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## புடைவைகள் திருடிய இருவர் நீதிமன்றில்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள வியாபார நிலையம் ஒன்றிலிருந்து 2 லட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியான புடைவை வகைகளைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இருவர் கடந்த செவ்வாயன்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

யாழ். பொலீஸ் நிலையத்தில் 8 நாள்கள் தடுத்து வைக்கப்பட்ட பின்பே இவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரித்த யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் க. கேசவன் சந்தேக நபர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(ஐ-7)

## எண்ணெய்க் குதம் சேதமடைந்த நிலையில்!

அரியாலை, பெப். 6

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முற்றவெளியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருக்கும் எண்ணெய் நிரப்பும் குதம் ஒன்று பாவிக்க முடியாத நிலையில் பழுதடைந்துள்ளது.

தற்போது இந்த எரிபொருள் நிலையத்தில் இரண்டு குதங்களைப் பயன்படுத்தியே எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சங்கத்தின் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மக்களுக்கு இந்த இரண்டு குதங்களையும் வைத்து எரிபொருளை சீராக விநியோகிக்க முடியாது என்றும் மண்ணெண்ணெய் விநியோகத்திற்கு மட்டும் இரண்டு குதங்கள் தேவைப்படுவதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-17)


### வாழ்த்துகின்றோம்

யாழ். இளையதம்பி வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர் இன்று சமாதான நீதிவானாக நியமனம் பெறும்

சமூகஜோதி

**கா. கணேசதாசன் J.P.**

அவர்களை வாழ்த்துகின்றோம்.

வாழ்க நின் பணி! வளர்க உம் தொண்டு!

தே. சுதாஷினி

''அன்னை இல்லம்'' பழைய மாணவர் சார்பில்
5, ஐயனார் கோவில்வீதி,
யாழ்ப்பாணம். (53108)



### முதலாண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 02 — 06 — 1952

விண்ணில்: 16 — 02 — 1997

**கணபதிப்பிள்ளை பத்மநாதன்**

(கிராமசேவை அலுவலர்— பளை)

திதி: 06 – 02 – 1998

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாத்துயர் கொண்டு வாடுகிறோம்
நூறாண்டு ஆயிடினும்
மாறாது நின்னினைவு
ஓராண்டு நிறைவதனில்
தேறாது வாடுகின்றோம்.

ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

அன்புள்ள தாய்,
மனைவி, பிள்ளைகள்.

பளை. (53070)


## விவசாயிகளுக்கு மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், பெப். 6

அளவெட்டி, மல்லாகம் ப. நோ. கூ. சங்கம் நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 5 லீற்றர் தொடக்கம் 10 லீற்றர் வரை மண்ணெண்ணெயை விநியோகித்து வருகிறது.

விவசாயத் தேவைக்கான மண்எண்ணெயை வட பிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனம் சங்கத்திற்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5)

## மர்மப் பொருள் வெடித்து காயம்

யாழ்ப்பாணம், பெப். 6

மட்டக்களப்பில் வெடிப்பொருள் ஒன்று வெடித்ததில் பாடசாலை மாணவர் ஒருவர் கைகளில் காயம் அடைந்தார்.

கல் குடாவில் வீதி ஓரத்தில் கிடந்த பொருள் ஒன்றை அவர் எடுத்து திறந்த போது அது வெடித்தது.

டேவிட் ஜெயசீலன் (12 வயது) என்ற மாணவனே காயமடைந்தவராவார்.

(ஐ-3)

## தடைசெய்யப்பட்ட பகுதிக்குள் செல்ல முயன்ற பெண்

யாழ்ப்பாணம், பெப். 6

மக்கள் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்ட ஆஸ்பத்திரி வீதியில் உள்ள இராணுவ காவல் அரண் பகுதியூடாகச் செல்ல முயன்ற சித்தசுவாதீனமற்ற பெண் ஒருவர் நேற்று நண்பகல் முன்தினம் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

சுமார் 50 வயது மதிக்கத்தக்க இவர் இராணுவத்தினரின் வேண்டுகோளையும் கவனியாது முகாம் பகுதியினுள் செல்ல முயற்சித்தார் என்றும் —

அப்பொழுது பெண் இராணுவத்தினர் அவ்விடத்துக்கு வந்து அப்பெண்ணை மடக்கிப் பிடித்தனர் என்றும் கூறப்படுகிறது.

(இ-7)

## நூல் வெளியீட்டு விழா

சண்டிலிப்பாய், பெப். 6

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர் எழுதிய 'காசி காண்ட வசன நூல்'' வெளியீட்டு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று நண்பகல் 12 மணிக்கு தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய மண்டபத்தில் ஓய்வுபெற்ற அதிபர் வே. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார். நூல் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முது நிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிவலிங்கராசா நிகழ்த்துவார். நூல் மதிப்பீட்டுரையை பண்டிதை பொன். பாக்கியம் நிகழ்த்துவார். பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா கலந்துகொள்வார்.

சுழிபுரம் சைவ நன்னெறிக் கழகத்தின் ஏற்பாட்டில் இவ் விழா நடைபெறுகிறது.

(ஐ-135)

## துர்க்காபுரம் மகளிர் இல்ல 16 ஆம் ஆண்டு நிறைவு விழா

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 16 ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இராமநாதன் கல்லூரியின் முகப்பு மண்டபத்தில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் இவ்விழாவில் யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி ந. சிவராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

திருமதி மலையரசி சிவராஜா பரிசில்களை வழங்குவார்.

ஆசியுரையை நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரியசுவாமிகளும், வாழ்த்துரையை இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ சிவஞானசுந்தரமும் வரவேற்புரையை ஆறு. திருமுருகனும் நிகழ்த்துவார்கள்.

பரிசளிப்பும், கலை நிகழ்வுகளும் உரைகளைத் தொடர்ந்து இடம்பெறும்.

(ஐ-9)

## கலந்துரையாடல்

பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள யாழ். மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறும்.

(ஐ-5-4)


### மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் உயர்திரு. செ. நேசராஜன் அவர்களது பணியினைப் பாராட்டும் விழா

**06 - 02 - 1998 (வெள்ளிக்கிழமை)**

1956 — 1959 மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தொண்டர் ஆசிரியர்
28 - 09 - 59 — 31 - 12 - 1966 வரை பட்டதாரி ஆசிரியராக மாத்தளை புனிததோமஸ் கல்லூரி
1967 — 1971 வரை யாழ் மத்தியகல்லூரி ஆசிரியராக
1971 — 1972 வரை கம்பளை சாஹிராக் கல்லூரியில் ஆசிரியராக
1972 — 1987 வரை யாழ். மத்திய கல்லூரி ஆசிரியராக
16 - 06 - 87 இல் மானிப்பாய் இந்துக்கல் லூரி
1988 இல் மேலதிக உப அதிபராக கடமையேற்றார்
01 - 06 - 1989 மானிப்பாய் இந்துக்கல்லூரியில் அதிபராக பதவியேற்றார்
01 - 06 - 89 — 31 - 05 - 93 வரை மானிப்பாய் கொத்தணி அதிபர் (10 பாடசாலைகளுக்கு)

சமூக நலன்களில்

1995 - 96 - 97 மானிப்பாய் லயன்ஸ் கழகத்தின் தலைவராக பணியாற்றினார். மருதடி விநாயகர் தர்மகர்த்தாசபை உறுப்பினராக 8 வருடங்களாக கடமையாற்றி வருகிறார்கள். அதிபர் பதவியில் ஓய்வுபெறுதல் 07 - 02 - 1998.

அன்னார் தமது மனைவி பிள்ளைகளுடன் நற்சுகத்துடன் வாழ வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

டாக்டர் சோ. சுந்தரராஜன்
பெற்றோர் சங்கத் தலைவர்

(53104)



உ

சர்வம் சிவமயம்

### யாழ். கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்

வளமுடன் வாழ்கவென
வாழ்த்துகின்றோம்

சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் இன்று [1998 - 02 - 06] செய்து கொள்ளும் எமது முன்னாள் அதிபரும், வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளருமாகிய பிரபல சமய சமூகசேவையாளர்



"சமூகஜோதி"

**உயர் சைவத்திரு. கா. கணேசதாசன் J.P.**

அவர்களை மனமகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றோம்.

திரு. சி. ஆ. சோதிலிங்கம்
அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

[சி/2805]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

பாலர் பாடசாலை நடத்துவதற்கு ஏற்றதாக நல்ல நிலையிலுள்ள சிறு கதிரைகள். மேசைகள் உடன் தேவை, நியாய விலையில் பேசித் தீர்மானிக்கலாம். தொடர்பு: பவா, 7/1, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். [53126]

### விற்பனைக்கு

பாவிக்காத நல்ல நிலையிலுள்ள சைனா வயலின் விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 3500. தொடர்பு: கி. ஆனந்தராஜா (ஆசிரியர்) இமையாணன் கூ. சங்கக்கடை அருகில், அல்வாய் வீதி, உடுப்பிட்டி. [53083]

### தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த சுதகல்யாணி திருலோகச்சந்திரன் என்பவரது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, விமான பதிவு இலக்கம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ். கொடிகாமம் பேருந்தில் அல்லது வேம்படி சோதனைச் சாவடிக்கு அண்மையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உரும்பிராய் கிழக்கில் அல்லது ராஜன் பின்னகம், 286, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (53130)

### ஆங்கிலம் — சிங்களம்

அடிப்படை ஆங்கில — சிங்கள பிரத்தியேக வகுப்புகள் ஆரம்பமாக இருக்கின்றன. ஆசிரியர் T. சகாதேவன், B A Lond. தொடர்புகளுக்கு: 46, பிர பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (53129)

## தபால் பொதி வரவில்லை

யாழ்ப்பாணம், பெப். 6

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையில் வாராந்தம் இடம்பெறும்செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் சேவை மூலமான தபால் விநியோகம் நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெறவில்லை.

இலங்கையின் ஐம்பதாவது சுதந்திரதின வைபவத்தை ஒட்டியே இத்தபால் சேவை இடம் பெறவில்லையெனவும், எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் வழமை போல் அச்சேவை இடம்பெறும் எனவும் யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-7)

## கலர் போட்டோ கழுவுதல்

கலர் பாஸ்போட் படம் எடுத்தல், பெரிதாக்கல் மற்றும் படச்சுருள் கழுவுதல் தற்போது நடைபெறுகிறது. எமது ஆய்வு கூடத்தில் உங்களுக்குத் தேவையான பிரதிகளை எடுத்துக் கொள்ளலாம்.

**குகன் ஸ்ருடியோ,**
**2 ஆம் குறுக்குத் தெரு,**
(தபால் கந்தோருக்கு அருகில்)
**பருத்தித்துறை.**

(53096)

மீண்டும் யாழ். மண்ணில்
நவீன இசைக் கருவிகளுடன்
புதிய இசைக் கலைஞர்கள் வழங்கும்

## ஆனந்தின்
## ஆனந்த இராகங்கள்

இடம்: யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பிரதான மண்டபம்
திகதி: 21 - 02 - 1998 (சனி)
நேரம்: காட்சி I 10.00 — 1.00
காட்சி II 2.00 — 5.00
(இலங்கை நேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(53122)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 23 — 05 — 1937
மறைவு: 06 — 02 — 1996

### அமரர் க. இராஜகோபால்

(இளைப்பாறிய அதிபரும், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்க உபதலைவரும்)


கண்ணாடி போல் உங்கள் மனதில் கவலை பல தெரியாமல் எங்களுக்கு எது தேவையென எங்களை கேளாமல் செய்வீர்களே — அப்பா! கனவுகளே நிலையாகி நீங்கள் மரணமாகின்ற போதும் சேவையே வாழ்க்கையின் குறிக்கோளென வாழ்ந்தீர்கள் — அப்பா! நிலையாய் நாம் நிம்மதியாய் வாழ உங்கள் ஆதரவைத் தாருங்கள் — அப்பா!

உங்கள் ஆத்மா சாந்திபடையப்பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

அல்வாய் மேற்கு,
திக்கம்.

(53060)

## இரண்டாண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 09 — 07 — 1942
மறைவு: 30 — 01 — 1996

### அமரர் கு. இராசரத்தினம்

(முன்னாள் ஆய்வுகூடத் தவிசாளர். ஹாட்லிக்கல்லூரி, பருத்தித்துறை, உரிமையாளர், சயன்ஸ் சென்ரர், மொடேர்ன் எடியுகேசன்சென்ரர். நெல்லியடி)

திதி: 6-2—1998

''நிலை பேறான கல்விதான் இவ்வையகத்தை ஆள்க என கன்னற் குரலெடுத்து கூறியவனே''

ஈராண்டும் கணப்பொழுதாய் ஓடியதே
ஆயிரம்யுகங்கள் சென்றாலும்
உங்கள் நினைவே எங்கள் உள்ளம் நிறைந்திருக்கும்.

மனைவி, மகன், மருமகள்,
பேர்த்தி, உறவினர், நண்பர்.

நவிண்டில்.
கரவெட்டி.

(சி/2739)

குருமயம்
கைதடி

## ஸ்ரீ சச்சிதானந்த ஆசிரம
### தியான நிலைய பிரவேச வைபவமும் 'தியானம்' சிறப்பு மலர் வெளியீடும் குருபூஜா வழிபாடும்.

காலம்: 09-02-1998 திங்கட்கிழமை
காலை 6.30 தொடக்கம் 7.30 வரை
தியான நிலைய பிரவேச சாந்தி வைபவம்.

பங்குபற்றும் சிவாச்சாரியர்கள்:
சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் (ச. நீ.)
சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள்
சிவஸ்ரீ மு. கணேசக்குருக்கள்
சிவஸ்ரீ யோ. குருசாமிக் குருக்கள்
சிவஸ்ரீ கி. மனோகரக் குருக்கள்

★ மு. ப. 9.00 - குருபீட பாத பூஜா - திரு. கி. இரத்தினசிங்கம்
★ மு. ப. 9.30 - 'தியானம்' மலர் வெளியீடு

வரவேற்புரை: திரு. சு. செல்வராசா (பொதுச் செயலாளர்)
தலைமையுரை: குலபதி ஆறுமுகம் கந்தையா (ச. நீ.)
முன்னிலை: சுவாமி சச்சிதானந்த
செல்லம்மா அம்மையார்
ஸ்ரீமத் ஆறுமுகம் சுவாமிகள்
துர்க்காதுரந்தரி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி (ச. நீ.)
அருளுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள்.
பிரதம விருந்தினர் உரை: திரு. பு. சுந்தரம்பிள்ளை (பிரதேச செயலர்)
கௌரவ விருந்தினர் உரை: டாக்டர் வ. சின்னப்பு (ஸ்ரீசச்சிதானந்த சுவாமிகள்-சீஷயன்)
மலர் ஆய்வுரை: திரு. ஆறு. திருமுருகன் (ஆசிரியர் விக்னேஸ்வராக் கல்லூரி)
முதற்பிரதி பெறுபவர்: திரு. கு. கங்கைவேணியன் (வேணிகளஞ்சியம்)
சிறப்புரையாளர்கள்: திரு. சி. சக்திகிரீவன் (செயலாளர் இந்து சமயப் பேரவை)
டாக்டர் கே. பி எஸ். சபாநாதன்
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை (நாவற்குழி)
நன்றியுரை: திரு. அ. லோகநாதன் (இணைச்செயலாளர்)

★ பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பரிசில் வழங்கல்.
★ ஆசிரம தொண்டர்களைக் கௌரவித்தல்

மங்கள இசை: திரு. சத்தியநாதன் குழு
திரு. தங்கவேலு குழு
சிற்பவேலை: திரு. இ. தங்கேஸ்வரன் குழுவினர் (அராலி)

பகல் 12.00 மணிக்கு விசேட பூசையைத் தொடர்ந்து மகேஸ்வரபூசை நடைபெறும். அன்பர்கள். அடியார்கள் பங்கு கொண்டு வழிபாடாற்றி. தியானம் இருந்து குருவருள் பெற்று இறை சிந்தனையுடன் திகழ அன்புடன் அழைக்கின்றோம்.

விளம்பர அன்பளிப்பு:
திரு. திருமதி கு. கங்கைவேணியன்,
வேணி களஞ்சியம்,
யாழ்ப்பாணம்.

[53113]

உ
கதிரேசன் கழலடி துணை

## உபநயன அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஈசுர வருடம் தை மாதம் 27 ஆம் நாள் (1998—02 09) திங்கட்கிழமை புனர்பூச நட்சத்திரமும், திரயோதசித் திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப நன்னாளில் முற்பகல் 9 மணி 35 நிமிடம் முதல் 10 மணி 15 நிமிடம் வரையுள்ள மீனலக்ன சுப நன் முகூர்த்தத்தில்

எமது கனிஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
### கிருஷ்ணராஜசர்மா
அவர்களுக்கு

எமது இல்லத்தில் யக்ஞோபவீததாரண உபநயன பிரம்மோபதேசம் நிகழக் கதிரேசன் திருவருளும், காஞ்சிப் பெரியார் குருவருளும் கூடிப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் குடும்ப சமேதராக வருகை தந்து புத்திரனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு: தனித்தனியே அழைப்பு அனுப்ப முடியாத காரணத்தால் இவ்வழைப்பை ஏற்று சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
வரவேற்பாளர்
சிவஸ்ரீ கி. நாராயணக் குருக்கள்
(கதிரேசன் கோயில் ஐயா)
கல்பனா கௌரி தம்பதிகள்
பிரம்மஸ்ரீ நா. கிருஷ்ணமோகன சர்மா,
நா. துளசிகா.

வெள்ளாந்தெரு,
நல்லதண்ணீர் கிணற்றடி,
வைரவர் கோயில்,
யாழ்ப்பாணம்.

(53121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலத்தில் உரையாற்றியதற்கு ஜனாதிபதி மன்னிப்புகோர வேண்டும்

## பௌத்த சங்கங்கள் கோரிக்கை

கொழும்பு, பெப் 6

கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர நாடாளுமன்றக் கட்டடத்தின் முன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுதந்திரப் பொன்விழா வைபவத்தில் ஆங்கிலத்தில் மட்டும் உரையாற்றியதற்காக ஜனாதிபதி சிங்கள மக்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

இவ்வாறு சில பௌத்த சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

தாய்நாட்டைப் பாதுகாக்கும் இயக்கத்தின் தலைவரான மொரத் தொட்டுவ ஆனந்த தேரர் இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ளார்.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள்முதல் நாட்டுத் தலைவர்கள் சிங்கள மொழியிலேயே உரையாற்றி வந்துள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மட்டுமே முதன் முறையாக இவ்வாறு ஆங்கிலத்தில் உரையாற்றியுள்ளார். ஆங்கிலத்தில் உரையாற்றியதன் மூலம் இந்த நாட்டு சிங்கள மக்களை இழிவுபடுத்திய காரணத்துக்காக அவர் நாட்டுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் மீண்டும் காலனித்துவ ஆட்சியைப் பின்பற்றுவது இதன் மூலம் தெளிவாகிறது என பௌத்த அமைப்புகளின் சம்மேளன செயலாளர் கலகே புண்ணிய வர்தன குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி ஆங்கிலத்தில் ஆற்றிய சுதந்திரதின உரை சிங்களம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் மொழிபெயர்த்து வாசிக்கப்பட்டது.

# 36 தம்பதியினருக்கு பொலிகண்டியில் திருமணப்பதிவு

நெல்லியடி, பெப். 06

சட்டரீதியான திருமணப் பதிவின்றி குடும்பமாக வாழ்ந்து வந்த 36 தம்பதியினருக்கு பொலிகண்டி பாரதி சனசமூக நிலையத்தினரால் ஒரே நாளில் திருமணப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி சன சமூக நிலைய மண்டபத்தில் இத் திருமணப் பதிவு கடந்த 31 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கரவெட்டி விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் தம்பிமுத்து அம்பிரசாதம் தலைமையில் நடைபெற்றது.

இக் கிராமத்தில் 36 தம்பதிகளும் நீண்ட காலமாக குடும்பமாக வாழ்ந்து வந்த போதிலும் அவர்கள் சட்டப்படி திருமணப் பதிவு மேற்கொள்ளவில்லை.

அவர்களின் நலன் கருதி பொலிகண்டி பாரதி சன சமூக நிலையத்தினர் இலவச திருமணப் பதிவை ஏற்பாடு செய்திருந்தனர்.

இவ் வைபவத்தில், பொலிகண்டி தெற்கு கிராம சேவை அலுவலர் வே. வன்னிமரம், ஓய்வு பெற்ற அதிபர் ச. திருப்பதி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் நா. மகேந்திரன், நிலைய போஷகர் வி. அம்பிராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(ஐ-109)

## மாநகரசபை உறுப்பினர் பதவி

# தகுதியானோரை நியமிக்க கூட்டணி இடம் கொடுக்கும்

குருநகர், பெப். 6

யாழ். மாநகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றியீட்டிய ஒன்பது இடங்களுக்கும் யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி ச. யோகேஸ்வரனைத் தவிர ஏனைய சிலர் தமது பதவிகளை இராஜினாமாச்செய்யக் கோரப்படுவார்கள். அவர்களுடைய இடங்களுக்கு யாழ். மாநகரசபை வட்டாரரீதியாகவும், சமய சமூக அடிப்படையிலும் தகுதியானவர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண அமைப்பாளர் மாவை சேனாதிராஜா இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் அலுவலகத்தில் குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் தலைவர் அ. பீற்றர்குமார் தலைமையில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

குருநகரில் மீன்பிடித்தொழிலாளர் மீன்பிடிக்கச் செல்ல விதிக்கப்பட்டுள்ள நேர மாற்றம், குருநகர்ப்பகுதி சுகாதார சீர்கேடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியனபற்றி குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணி அமைப்பின் பிரதிநிதிகள் அவருடன் கலந்துரையாடினர்.

(ஐ-51)

## மினி பஸ் சேவை

தென்மராட்சி மினிபஸ் சங்கத்தினர் மட்டுவில்வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயிலிலிருந்து சாவகச்சேரி வரையிலான புதிய பஸ் சேவையினை கடந்த முதலாம் திகதி முதல் ஆரம்பித்துள்ளனர்.

இந்த பஸ் தினமும் காலை 7.15 மணிக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடியில் இருந்து புறப்பட்டு கண்கன் புளியடி, மட்டுவில் சந்தி, பெருங்குளம் சந்தி ஊடாக சாவகச்சேரி பஸ் நிலையத்தை வந்தடைந்து மீண்டும் பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டுச் செல்லும் என சங்கத் தலைவர் எம். அற்புதராசா தெரிவித்தார்.

(ஐ-5-117)

# திருந்தாத உள்ளங்கள்

## வாசகர் திருமுகம்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மினிவான் சாரதிகளின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதை சமீபகாலமாக அவதானிக்கமுடிகிறது. அண்மையில் கூட போட்டி போட்டு ஓடிய மினிவான்கள் விபத்துக்குள்ளானதை பத்திரிகை வாயிலாக அறிந்தோம்.

கடந்த 21-01-1998 புதன்கிழமை நண்பகல் 1.45 மணி அளவில் பருத்தித்துறை பேருந்து நிலையத்திலிருந்து மினிவான் ஒன்று 750 ஆம் இலக்கப் பாதையில் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது. மினிவான் நடத்துநர் தனது வழமையான பாணியில் எல்லோரையும் கூவி அழைத்து ஏற்றிக்கொண்டார்.

மினிவான் வல்லையை அடைந்தது. அவ்விடத்தில் தான் வடமராட்சியின் நிரந்தர குடியிருப்பாளர்கள் அல்லாதோர் "பாஸ்" பெறுவது வழக்கம். வடமராட்சியிலிருந்து வெளியே செல்லும் போது தமது "பாஸை" ஒப்படைத்து தமது அடையாள அட்டையைப் பெற வேண்டும். இந்த நடைமுறைக்கு இணங்க இளைஞர் ஒருவர் தமது அடையாள அட்டையைப் பெறுவதற்கு சென்று ஐந்து, ஆறு நிமிடங்கள் சென்றும் அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு திரும்பிவரவில்லை. அவரது அடையாள அட்டையை இராணுவத்தினர் திருப்பிக்கொடுப்பதற்கு தாமதமாகிவிட்டது.

இதற்கிடையில் இ. போ. ச பேருந்து ஒன்றும் பின்னால் வந்து சேர்ந்தது. மினிவான் சாரதிக்கு போக்குவரத்துச் சேவைப்பேருந்து தம்மை முந்திக் கொண்டு சென்றுவிடப்போகிறதே என்ற ஆதங்கம் ஏற்பட்டுவிட்டது. ஒரு நிமிடம் தாமதித்துப் பார்த்தார். இளைஞரின் அடையாள அட்டை அப்போதும் திரும்பக் கொடுபடவில்லை. இராணுவத்தினர் அதனை தேடுவதும் தெரிந்தது. மினிவான் சாரதியின் பொறுமை எல்லையைக் கடந்தது. மினிவானை புயல் வேகத்தில் ஓட்டினார். 150 மீற்றர் தூரம் சென்றிருப்போம் அவ்விளைஞர் பின்னால் ஓடிவந்து கை காட்டுவது தெரிந்தது. பிரயாணிகள் மினிவானை நிறுத்துமாறு வேண்டினர். சாரதியின் காதில் அது விழுந்ததாகத் தெரியவில்லை. அவரின் எண்ணமெல்லாம் பின்னால் வந்து நின்ற இ. போ. ச பேருந்து தன்னை முந்தி விடக்கூடாதே என்பதுதான். இன்னும் எத்தனை பேரை ஏற்றலாம் என்று எண்ணினாரே தவிர காசுகொடுத்து ஏறிய பயணியை தான் நடுத்தெருவில் விட்டதுபற்றி அவர் எள்ளவேனும் கவலைப்பட்டதாக இல்லை. மனச்சாட்சி செத்தமனிதனாக அவர் நடந்து கொண்டார். ஒரு சில பயணிகளைத்தவிர மற்றைய பயணிகளும் அவரின் செயற்பாட்டிற்கு அவரை அனுமதித்தது போலவே இருந்தனர். ஒரு தடவை வானை நிறுத்துமாறு கூறியதோடு தமது கடமையும் முடிந்து விட்டது என்று எண்ணினார்கள் போலும்!

மினிவான் சாரதிகள் பொறுப்பற்ற முறையில் நடப்பது இது முதற்தடவையல்ல. எத்தனையோ சம்பவங்கள் நடந்துவிட்டன; யார் கேட்பது?

நாம் இன்னமும் திருந்தவில்லை இழப்புக்கள், இடப்பெயர்வுகள், அகதி வாழ்க்கை எதுவுமே எம்மை மாற்றவில்லை. எப்போது தான் நாம் திருந்தப்போகின்றோமோ?

இது தொடர்பாக வடமராட்சி இற்றூர்திச் சேவைச் சங்கம் என்ன கூறப்போகின்றதோ? மனச் சாட்சி உள்ள மக்களுக்கு இது சமர்ப்பணம்.

வே. சந்திரசேகர்

திருநெல்வேலி

# வேலை வாய்ப்பின்மை

கடந்த பல வருடங்களாக குடாநாட்டில் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்கும் மார்க்கங்கள் அருகி, போர்க்காலச் சூழ்நிலையாலும், பிரதேசத்தில் நிலவிய ஸ்திரமற்ற பொருளாதார நிலையாலும் கல்வி கற்றவர்களுக்கும், தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பே கிடைக்காமற் போயிற்று.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவியேற்று ஒரு வருடத்திற்குப் பின்னர் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அதிகாரத்திற்குள் வேலை வங்கியொன்று ஆரம்பித்து அதனூடாக தகுதிக்கேற்ப வேலை வாய்ப்பு பெற்றுக் கொடுக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வேலை வங்கி 1996 இல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்பட்ட எண்ணிக்கை பற்றி இதுவரை ஒருவித அறிவிப்பும் இல்லை.

ஆனால் கல்வி கற்றோர் க. பொ. த. (சாதாரணம்), க. பொ த. (உயர்தரம்) தகமைகளுடன் 22,000 பேர்களும், 600 பட்டதாரிகளும் பதிவு செய்து வேலையற்றிருக்கிறார்களென்றும் பத்திரிகை வாயிலாக அறியக் கூடியதாகவிருக்கிறது. வேலைவங்கியின் தொழிற்பாடு இதுவரை வேலையற்றோர்களின் புள்ளி விவரங்களை கணித்ததேயன்றி வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதாகத் தெரியவில்லை.

குடாநாட்டில் வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அரசின் கொள்கைப்படி வருடந் தோறும் பின்வரும் துறைகளுக்கு போட்டிப் பரீட்சைகள் நடத்துவதற்கு ஒழுங்கு செய்தல் ஒரு மார்க்கமாயிருக்கும்.

இலங்கை நிர்வாகசேவை, இலங்கை கணக்காளர் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை, இலங்கை கணக்காய்வாளர் சேவை, விஞ்ஞான பொறியியல் சேவை, பொது சேவைகளுக்கு ஆட்சேர்ப்புப் பரீட்சை, தமிழ் மொழி மூலம் ஆசிரியர்களாகத் தெரிவு செய்வதற்குரிய பரீட்சை, சுகாதார சேவை.

தற்பொழுது இருக்கும் மிகவும் மோசமான நிலைக்குக் காரணம் மத்திய அரசாங்கத்துக்கும், வடக்கு—கிழக்கு மாகாணசபைக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் இழுபறி நிலையென்று எண்ண வேண்டியுள்ளது.

இதற்கு உதாரணமாக வடக்கு — கிழக்கு மாகாண சபையால் சென்ற வருடம் விளம்பரப்படுத்தப்பட்டு விண்ணப்பங்களும் ஏற்கப்பட்ட பின்வரும் மூன்று பரீட்சைகள் இது வரை நடத்தப்படவில்லை:-

சங்கீத ஆசிரியர் தெரிவுப்பரீட்சை, தொழில் நுட்பவியலாளர் தெரிவுப்பரீட்சை, எழுதுநர் தெரிவுப் பரீட்சை.

மேலும் 1996 இல் சமயபாட ஆசிரியர்கள் தெரிவுப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரி 1997 ஜூனில் பரீட்சை நடத்தப்பட்டு இதுவரை இதற்கான பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை. தற்பொழுது ஆசிரியர்களை தெரிவு செய்

(9 ஆம் பக்கம் பார்க்க)

# தைப்பூசத் திருநாள் சிறப்புகள் பல

## ஞானக் கதிர்

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தைப்பூசத் திருநாளாகும். பண்டைக்காலம் தொட்டு இந்து மக்கள் கடைப்பிடித்து வரும் புண்ணிய தினங்களில் ஆழ்ந்த அர்த்தமுள்ள கருத்துக்கள் புதைந்துள்ளன. இந்த வகையில் "தைப்பூசம்" ஒரு சுப தினமாகும். இந்த நல்ல நாளில் எந்த ஒரு சுபகாரியத்தையும் செய்யலாம்.

இருபத்தொரு நட்சத்திரங்களுள் பூசம் அல்லது புஷ்யம் எட்டாவதாகும். தை மாதத்தில் பூச நட்சத்திரம் வரும் நாள் அநேகமாக நிறைமதி நாளாக இருக்கும். இதனைப் புண்ணிய நாளாக இந்துக்கள் கொண்டாடுவர்.

தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதியை பூச நட்சத்திரத்தின் தேவதை என்பார்கள். பிரகஸ்பதியை அறிவின் தேவதை என இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கினால் பிரகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பார்கள் தைப்பூச நன்னாளில் புண்ணிய நதியில் நீராடினால் அதிக புண்ணியம் கிடைக்கும்.

தைப்பூச நன்னாளில் புதிதாய் விளைந்த தானியக் கதிர்களை உழவர்கள் வீட்டிற்கு எடுத்து வருவார்கள். இது "புதிது எடுத்தல்" எனப்படும். வீட்டில் சேர்ந்த நெல்மணிகளை தெய்வ விழாக்களுக்கு அர்ப்பணித்து மகிழ்வார்கள். மற்றும் தம்முடன் சேர்ந்து பாடுபட்ட இனத்தவர்கள், நண்பர்கள், ஏழை எளியவர்களுக்கும் கொடுத்து மகிழ்வார்கள்.

தைப்பூசம் ஆதிசேடனும் வியாக்கிய பாதரும் காண இறைவன் இன்பத் திருநடனம் ஆடிய நாளாகவும் விளங்குகிறது. இதனை மணிவாசகர் "பதஞ்சலிக்கருளிய பரம நாடகம்" என்று கூறியுள்ளார். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள "திருவிடை மருதூர்" இத்தைப்பூச விழாவிற்குச் சிறந்த தலமாகும்.

பூச நட்சத்திரத்தை வடமொழியில் 'திஷ்யம்' என அழைப்பார்கள். திஷ்யம் என்பது தைசம் எனவரும் தைசம் என்பதுதைஎனமருவிநின்றது.

தைப்பூசத்தின் சிறப்பை உணர்த்தும் வகையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் சுவாமிகள் பாடிய தேவாரம் இதுவாகும்.

தைப்பூச மொண்கண் மட நல்லார் மாமயிலைத்
தைப்பூச நீற்றான் கபாலீச்
சரமமர்ந் தான்
நெய்ப்பூச மொண்புழுக்கல்
நேரிழையார் கொண்டா
டும்
தைப்பூசங்காணாதேபோதி
யோ பூம்பாவாய்.

தைப்பூச நன்னாளில் முருகனுக்குரிய சிறப்புத் திருநாளாகவும் விழா எடுக்கப்படுகிறது. தமிழகத்தின் குமரக் கடவுளின் திருத்தலங்களான ஆறுபடை வீடுகள் அமைந்த திருக்கோயில்களில் தைப்பூசத்திருவிழா பக்தி மணம் கமழக் கொண்டாடப் படுவதுண்டு. திருச்செந்தூர் பழனி திருப்பரங்குன்றம் உட்பட்ட முருகன் ஆலயங்களில் இன்று தேர்த்திருவிழாக்களும் விசேட அபிஷேக பூசை வழிபாடுகளும் நடைபெறும்.

தந்தைக்கு உபதேசித்த ஞானக்குமரனின் சிறப்புடைத் திருவிழா நடைபெறும். அத்துடன் தீட்சை கொடுக்கும் நிகழ்வு மற்றும் குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி கல்வி ஆரம்பம் செய்து வைக்கும் நிகழ்வுகளும் இடம் பெறும்.

தைப்பூசத் திருநாள் பல அம்சங்களிலும் அருள் நல்கும் தினமாகும்.

கா. கணேசதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

## நயினாதீவு வீதிகள் சேதம்

நெடுந்தீவு, பெப் 6

அனலைதீவு, நயினாதீவு பிரதான வீதிகள் நீண்ட காலமாக திருத்தப்படாமல் இருப்பதால் பாதசாரிகளும், துவிச்சக்கரவண்டியில் செல்லும் பயணிகளும் சிரமப்படுகின்றனர்.

சுமார் 25 வருடங்களுக்கு மேலாக இவ்வீதிகள் புனரமைப்பு செய்யப்படாமலிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-5-111)

## பனங்கிழங்கு உற்பத்தி வீழ்ச்சி

ஊர்காவற்துறை வேலணைப் பகுதிகளில் இம்முறை பனங்கிழங்கு உற்பத்தி பெரிதும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இடப்பெயர்வை அடுத்து கணிசமானமக்கள் இன்னும் மீளக் குடியேறாமையே இந்த வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாகும்.

(ஐ-5-111)

## கசிப்பு உற்பத்தி

செம்பியன்பற்று, பெப். 6

வடமராட்சி கிழக்கு நெல்லியான், நாகர்கோயில்பகுதிகளில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக முறையிடப்படுகிறது.

(ஐ-5-36)

## தீயை அணைத்தவர் காயம்

நெல்லியடி, பெப். 6

வீடு தீப்பற்றிய போது அதனை அணைக்க முற்பட்டவர் எரிகாயங்களுக்கு உள்ளானார்.

இச்சம்பவம் ஞாயிறு இரவு கொற்றாவத்தையிலுள்ள, திருவத்தோட்டத்தில் இடம் பெற்றது.

நடராசா நாகேஸ்வரன் (வயது30) என்பவரே எரிகாயங்களுடன் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(இ-109)

## பல்கலைக்கழக அனுமதி

யாழ்ப்பாணம் பெப். 6

1997 – 98 கல்வியாண்டுக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்துக்கு 66 பேருக்கும், பௌதிக விஞ்ஞானத்துக்கு 100 பேருக்கும், உயிரியியல் விஞ்ஞானத்துக்கு 42 பேருக்கும் அனுமதி கிடைத்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இக்கல்வியாண்டுக்கு மொத்தம் 664 மாணவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

[ஐ-5]

## சமாதான நீதிவான்

அரியாலை, பெப். 6

யாழ் கொழும்புத்துறையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் "சமுகஜோதி" கார்த்திகேசு கணேசதாசன் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக இன்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட நீதிவான் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்.

(ஐ-17)

## ச. ச. நிலையம் இயங்குகிறது

கொழும்புத்துறை, பெப். 6

அராலி வடக்கு கிராம முன்னேற்றச் சங்க சனசமூக நிலையம் கடந்த கால யுத்த அனர்த்தங்களின் பின் புனரமைக்கப்பட்டு புதிய ஆட்சிக்குழு தெரிவு செய்யப்பட்டு தற்போது செயற்பட்டு வருவதாக நிலையச்செயலாளர் பொ. நவராசா தெரிவித்துள்ளார்.

(ஐ-80)

## பரிபாலன சபை

நவாலி, பெப். 6

சாவற்கட்டு ஆந்திக்குளி ஞானவைரவர் ஆலயத்துக்கு பரிபாலன சபை ஒன்று கடந்த 23 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

(இ-100)

## தவறவிட்ட பணம்

யாழ்ப்பாணம், பெப். 6

யாழ். போதனா வைத்தியசாலையில் சிறு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பணத்தை தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரங்காட்டி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு நிர்வாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

(ஐ 5-ரீ)

## பிரிவுபசார விழா

சண்டிலிப்பாய், பெப். 6

மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் செ. கேசவராஜன் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதையிட்டு இன்று வெள்ளிக்கிழமை பாடசாலையில் சேவை நலன் பாராட்டு விழா நடைபெறவுள்ளது.

உப அதிபர் வி. தம்பிப்பிள்ளை தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து நடத்தும் இவ் விழாவில் பிரதம அதிதியாக சண்டிலிப்பாய்க் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதனும் சிறப்பு விருந்தினராக உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்லையாவும் கலந்து கொள்வர்.

(ஐ-5-135)

## மருந்து வகை தட்டுப்பாடு

நவாலி, பெப் 6

யாழ் போதனாவைத்தியசாலையின் வைத்திய சிகிச்சைப் பிரிவின் மருந்தகத்தில் 12 வகையான மருந்துகள் முடிந்து விட்டதாக அங்கு தொங்க விடப்பட்டிருக்கும் அறிவித்தல் பலகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றில் அல்டோமற், நிப்பிடிப்பின், புறூபன், விற்றமின்பிகோ, சிமிற்றிலின் அஸ்பிறின் போன்ற மருந்துகளும் அடங்குகின்றன.

(ஐ-5-100)

## மோதிரம் கிடைத்தது

மூன்று மாதங்களுக்கு முன்னர் பாடசாலை வளவில் தொலைந்த மாணவனின் மோதிரம் அதே வகுப்பு சக மாணவனால் கண்டெடுக்கப்பட்டு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்ட சம்பவம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கடந்த செவ்வாயன்று இடம் பெற்றது.

ஆண்டு 11 இல் கல்வி பயிலும் குணரத்தினம் பிரேம்நாத் என்னும் மாணவனே மோதிரத்தைக் கண்டெடுத்து உரியவரிடம் ஒப்படைத்து அதிபர், ஆசிரியர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

(ஐ-5-117)

## அ. அட்டை அலுவலகம் இடமாற்றம்

நவாலி பெப். 6

யாழ். செயலகத்திலிருந்த விசேட அடையாள அட்டைப் பிரிவு கண்டிவீதியில் இலங்கை செஞ்சிலுவைச்சங்க அலுவலகத்துக் குமுன்பாகவுள்ள கட்டடமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதே வேளைதேசிய அடையாள அட்டைப் பிரிவு செயலகத்திலேயே தொடர்ந்து இயங்கி வருகின்றது.

(ஐ-100)

## இலவச ஆங்கில வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

திருநெல்வேலி காளிகோயிலடி சனசமூக நிலையத்தில் வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய நாள்களில் இலவச ஆங்கில வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

(ஐ-7)

## பேரீச்சம்பழம் விலை வீழ்ச்சி

பேரீச்சம்பழத்தின் விலை குறைந்துள்ளது. யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஒரு கிலோ பேரீச்சம்பழம் 37 ரூபாவாக விற்கப்படுகிறது.

(ஐ-17)

## யுனிசெவ் உதவி

வலி. வடக்கில் மீளக் குடியமர்ந்தவர்களில் சுமார் இரண்டாயிரம் குடும்பங்களுக்கு யூனிசெவ் நிறுவனம் பிளாஸ்ரிக்வாளி, பாய் போன்றவற்றை அண்மையில் வழங்கியது.

அளவெட்டி— மல்லாகம் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் வைத்து இப்பொருள்களை யூனிசெவ் யாழ். வதிவிடப் பிரதிநிதி, திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் ஆகியோர் வழங்கினார்கள்.

(ஐ-5)

## அர்ச்சகர் ஓய்வு

அரியாலை, பெப். 6

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தில் சுமார் நாற்பது ஆண்டு காலம் சேவையாற்றிய பிரம்மஸ்ரீ சோ. லோகேஸ்வரசர்மா அர்ச்சகர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

[ஐ-17]

## உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், பெப். 6

நயினாதிவு அரசினர் மருத்துவமனையில் வாரீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு கடந்த டிசம்பர் மாதம் முதல் மீண்டும் உணவு வகைகள் வழங்கப்பட்டுவருகின்றது.

கடந்த 1990 ஆம் ஆண்டிலிருந்து இவ் வைத்திய சாலையில் நோயாளிகளுக்கு உணவு விநியோகம் செய்யப்படாமலிருந்தது.

(ஐ 5-109)

## சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப் 6

இணுவில் சைவத்திருநெறிக்கழகத்தின் ஏற்பாட்டில் இணுவில் சிவகாமி அம்மன் கோயில் முன்பாக அமைந்துள்ள அன்னதான மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சமயச்சொற்பொழிவு இடம்பெறும்.

'ஆர் பெறுவார்' என்ற தலைப்பில் ஆசிரியர் ஆறு. திருமுருகன் உரையாற்றுவார்.

(ஐ)

## பாலர் பாடசாலை புனரமைப்பு

"யூனிசெவ்" உதவித் திட்டத்தின் கீழ் வலி. வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் இரு பாலர் பாடசாலைக் கட்டடங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அளவெட்டிகலைவாணி சனசமூக நிலையத்தின் பாலர் பாடசாலையும், மல்லாகத்திலுள்ள பிரதேசசபை தலைமைச் செயலகத்திலுள்ள பாலர் பாடசாலையுமே இவ்வாறு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-135)

## கட்டட வேலைகள் பூர்த்தி

சாவகச்சேரி பிரதேசசபையினால் மிருசுவிலில் நிர்மாணிக்கப்பட்ட பொது நூல் நிலையக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இக் கட்டடம் விரைவில் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5-117)

# மட்டு. ரயில் நிலைய வீதி மக்கள் பாவனைக்கு

மட்டக்களப்பு, பெப் 6

கடந்த இரு ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டிருந்த மட்டக்களப்பு ரயில் நிலைய வீதி நேற்று முன் தினம் பொது மக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டது.

அந்த வீதியில் அமைந்துள்ள ரெலிக்கொம் நிறுவன வளவில் கடந்த 95 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சக்தி வாய்ந்த குண்டு கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இந்த வீதி பொது மக்கள் பாவனைக்கு தடை செய்யப்பட்டிருந்தது.

(ஐ-3)

# விவசாய தேவைகளுக்கு மாதம் ஒருலட்சம் லீற்றர்ம. எண்ணெய்

## பெற்றோலியக் கூ. தாபனம் வழங்கும்

திருநெல்வேலி, பெப். 6.

யாழ். மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மரக்கறி பயிர்களுக்கும் ஏனைய பயிர் வகைகளுக்கும் நீர்ப்பாசனம் செய்வதற்காக மாதாந்தம் ஒரு இலட்சம் லீற்றர் மண்ணெண்ணெயை விநியோகம் செய்வதற்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இந்த மண்ணெண்ணெயை விவசாயிகளுக்கு விநியோகம் செய்வது பற்றி ஆராயுமுகமாக ஆலோசனைக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை யாழ். அரசாங்க செயலகத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-135)

# உருளைக்கிழங்குகள் இரவு வேளை திருட்டு

உரும்பிராய், கோப்பாய் வடக்குப் பகுதிகளில் திருட்டுக்கள் அதிகரித்துள்ளன பயிரிடப்பட்டு அறுவடைக்குத் தயாரான நிலையில் இருக்கும் உருளைக்கிழங்குகள் இரவு நேரத்தில் கிளறி எடுக்கப்படுகின்றன.

இரவு நேரம் ஊரடங்கு அமுலில் உள்ளதால் விவசாயிகள் தோட்டங்களில் தங்கியிருந்து காவல் செய்ய அஞ்சுகின்றனர்.

(இ-154)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், பெப் 6

ஆனைக்கோட்டை ஸ்ரீ வீரமா பிடாரி அம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

(ஐ-5)

★ ★ ★

நீர்வேலி வடக்கு ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய மணவாளக் கோலத் திருவிழாவும், 1008 சங்காபிஷேகமும் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்றுருகிறது.

(ஐ-5-135)

★ ★ ★

தென் புலோலி ஸ்ரீ முகலி அம்பாள் ஆலய வருடாந்த மணவாளக்கோல விழா நாளை சனிக்கிழமை பகல் நடைபெறவுள்ளது.

(ஐ-5-109)

★ ★ ★

கொக்குவில் தலையாழி ஸ்ரீ ஞானவைரவர் கோயில் அலங்கார உற்சவம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு ஆரம்பமாகி எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும்.

அலங்கார உற்சவ காலத்தில் காலை 8 மணிக்கு பூஜையும் பிற்பகல் 1 30 மணிக்கு அபிஷேகமும், 3 மணிக்கு வசந்தமண்டபப் பூஜையும் பின் சுவாமி வெளிவீதி வலம் வருதலும் இடம்பெறும்.

(ஐ-5-4)

★ ★ ★

சுழிபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோயில் கும்பாபிஷேக தினத்தை ஒட்டிய சங்காபிஷேகம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் அன்னச் சப்பரத்தில் வீதி உலா வருவார்.

(ஐ 5-4)

★ ★ ★

கோண்டாவில் மேற்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலய புதிய சித்திரத் தேருக்கான பவளக்கால் நாட்டு விழா இம்மாதம் 10 ஆம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

(ஐ-4)

யாழ். சுந்தர்மடம் அரசடி வீதி செல்வநாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் கும்பாபிஷேக தின உற்சவம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு நடைபெறும் பூசையை அடுத்து சங்காபிஷேகமும், நண்பகலில் அன்னதானமும் நடைபெறும். இந் நிகழ்வில் "அருட் சொல்வாரி" சுழிபுரம் ந. சிவசண்முகமூர்த்தி "அன்னை பராசக்தி" என்னும் பொருள் பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார்.

(ஐ-135)

★ ★ ★

வடகோவை அருள்மிகு ஸ்ரீ சாந்தி துர்க்கை அம்மன் கோயிலில் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மணவாளக்கோல 108 கலச சங்காபிஷேகம் நடைபெற்று அம்பிகை பூந்தண்டிகையில் வீதி வலம் வருவார்.

(ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், பெப். 6

அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 8 30 மணி முதல் 1008 சங்காபிஷேகம் நடைபெறும்

மாலை 4-30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா இடம்பெறும். (ஐ)

★ ★ ★

நீர்வேலி வடக்கு அருள்மிகு காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 8 ஆம் திகதி முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் விசேட அபிஷேக ஆராதனைகளும், அம்பாள் வெளிவீதி உலாவருதலும் இடம் பெற்றுவருகின்றது.

இ-7)

★ ★ ★

தெல்லிப்பழை கருணை மிகு காசிவிநாயகர் ஆலய புனருத்தாரண மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30மணிக்கு நடைபெற உள்ளது. சிவஸ்ரீ சி. கணேசலிங்கக் குருக்கள் தலைமையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும். முதல் நாள் ஞாயிற்றுக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும்.

(ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## துணிச்சல் வருமா?

சுதந்திரம் அடைந்த கடந்த ஐம்பது ஆண்டுகளில் பல துறைகளில், பல விடயங்களில் இலங்கை முன்னேறியும் முன்னணியிலும் நின்ற போதிலும் —

முழுமையான தேசம் ஒன்றைக் கட்டி எழுப்ப வேண்டிய அத்தியாவசிய பணியில் தோல்வி கண்டுள்ளோம் — என்ற உண்மையை ஜனாதிபதி சந்திரிகா தமது சுதந்திர தினப் பொன் விழா உரையில் ஒப்புக்கொண்டுள்ளார்.

அந்த அத்தியாவசியப் பணியைச் செய்வதற்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களை இலங்கை மக்கள் நழுவ விட்டு விட்டனர். இது இறுதிச் சந்தர்ப்பம். இனியும் நழுவ விட்டு விடக் கூடாது.

பெரும்பான்மைச் சிங்கள மக்களும் சிறுபான்மைத் தமிழ் மக்களும் நல்லிணக்கத்தோடு வாழக் கிடைத்துள்ள வாய்ப்பை நழுவவிடக் கூடாது. பல முறை அந்த வாய்ப்பு நழுவிப் போய் விட்டது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அனைத்து மக்களும் ஒத்துழைக்க வேண்டும். — என்றும் ஜனாதிபதி தமது உரையில் தெரிவித்தார்; வேண்டுகோள் விடுத்தார்.

அவரது இந்த வேண்டுகோள் சிங்கள மக்களின், ஏனைய சிங்கள அரசியல் தலைவர்களின், காதுகளில் ஏறுமா அல்லது செவிடன் காதில் ஊதிய சங்காக காற்றில் கலக்குமா?

மிகக் குறிப்பாகச் சிங்களத் தலைவர்கள் இது குறித்துச் சற்று நிதானத்துடனும் அவதானத்துடனும் கவனமெடுத்துக் கொள்வது அவசியம். அரசன் எவ்வழி குடிகள் அவ்வழியே என்பதால் தலைவர்கள் இது விடயத்தில் மக்களுக்கு உண்மையைக் கூறி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவ வேண்டும்.

ஜனாதிபதி கூறியதுபோல, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கிடைத்த பல சந்தர்ப்பங்களைச் சிங்களத் தலைவர்கள் நழுவவிட்டது உண்மை. அவர்கள் தமது அரசியல் கட்சி, சுய நலன்களை முன்னிலைப்படுத்திச் செயற்பட்டதாலேயே இன்றைய பயங்கர நிலை உருவாகியது. பதவி ஆசையால் உண்டாகும் அரசியல் லாபம் தேடும் போக்கு இந்த நாட்டை இந்தளவு அழிவு நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது.

ஆட்சியில் இருக்கும்போது இனப்பிரச்சினையைத் தீர்க்க உழைப்பதாக மேடைகளில் பேசுவதும், எதிரணியில் அமர்ந்ததும் தீர்வு காண்பதற்குத் தடையாக இருப்பதும் சிங்கள அரசியல் தலைவர்களின் கைவந்த கலையாகிவிட்டது; ஒருவகை நாகரிகமும் ஆகிவிட்டது.

இப்போதும் கூட இந்தநிலை மாறவில்லை; மாற்றப்படவில்லை.

சுதந்திரம் சிங்கள மக்களுக்கு மட்டுமே என்றாகிவிட்ட நிலையில், தேசம் போரினால் சிதைந்து கொண்டிருக்கும் நிலையில் சுதந்திரப் பொன்விழா அர்த்தமற்ற ஒன்றாகவே அமைந்தது.

ஒரு நாடு சுதந்திரமானது என்று சொல்வதற்கு அந்த நாட்டில் வாழும் சகல தரப்பாருக்கும் சுதந்திரம் சொந்தமாக வேண்டும். இதனை மனதில் இருத்தி இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு சிங்கள அரசியல் தலைவர்கள் தமது கட்சி நலன்களை மறந்து உழைப்பது அவசியம்.

அதற்கான துணிச்சலும் நேர்மையும், இதயசுத்தியும், பொறுப்புணர்வும் ஜனாதிபதி உட்படச் சகலருக்கும் பிறந்தால் மட்டுமே இம்முறையாவது பஸ்ஸைத் தவறவிடாது இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

## வாதரவத்தை கொலை; மேலும் 4 பொலிஸார் கைது

யாழ்ப்பாணம், பெப். 6

அச்சுவேலி தெற்கு வாதரவத்தையில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற இளைஞர், யுவதி கொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் மேலும் நான்கு பொலிஸார் கைது செய்யப்பட்டு நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

இவ் வழக்கை விசாரணை செய்து வரும் மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் மு. திருநாவுக்கரசு இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இவர்கள் இன்று மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட உள்ளனர்.

இவ் வழக்குத் தொடர்பாக ஏற்கனவே கைது செய்யப்பட்ட 10 பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் அடையாள அணிவகுப்பு இன்று நடைபெறும். (இ-9)

### பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்)

தூதுவர் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸும் வைபவத்தில் கலந்து கொண்டார்.

அவரே அந்த நிதியை யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்திருந்த பிரதிநிதிகளிடம் கையளித்தார்.

யாழ். மணிக்கூண்டுக் கோபுரம் திருத்தி அமைக்கப்படும்போது வைத்துக் கட்டப்படும் பெயர்ப் பலகையையும் பிரிட்டன் வழங்கி உள்ளது. வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் இளவரசர் சார்ள்ஸிடமிருந்து அதனைப் பெற்றுக் கொண்டார்.

இந்த வைபவத்தில் யாழ். மக்கள் அனுபவித்த அவலங்களை யாழ். பிரதிநிதிகள் இளவரசர் சார்ள்ஸிடம் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மக்களின் அவலங்களை உணருவதாகவும்— பிரிட்டனின் இந்த அன்பளிப்பு நகர வாழ்க்கை மீண்டும் நிலைபெற ஒரு குறியீடாக இருக்கும் என்றும் இளவரசர் சார்ள்ஸ் பதில் அளித்தார். (இ-7-3)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத்தொடர்)

டாங்கி ஒன்றும் கடும் சேதத்துக்குள்ளானது என்றும்— புலிகளின் குரல் தெரிவித்தது. (இ-7-3)

### சுயவிருப்ப..

(முதலாம் பக்கத் தொடர்)

பொலிஸார் தமது விருப்பத்துக்கு மாறாக ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு இராணுவப் பொலிஸாரினால் பலவந்தப்படுத்தப்பட்டார்கள் என்று சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்து, அது குறித்து விசாரணை நடத்தப்பட்டு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

பிரஸ்தாப இரு பொலிஸாரும் அரச தரப்புச் சாட்சிகளாக மாறியது தெரிந்ததே. (இ-3)

### 5 லட்ச...

(முதலாம் பக்கத் தொடர்)

நேற்றிரவு இது தொடர்பான பேச்சுக்கள் கொழும்பில் நடைபெற்றன.

சம்பள உயர்வு குறித்து எதுவித முடிவும் எட்டப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் 105 ரூபாவுக்கு உயர்த்தப்படும் வரை வேலை நிறுத்தம் தொடரும் என்று இ.தொ.கா. பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார். (இ-3-9)

## திருமலையில் 4 தமிழர் கைது

யாழ்ப்பாணம், பெப். 6

திருமலையில் உடும்பு வேட்டைக்குச் சென்ற நான்கு தமிழர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எஸ். நடராசா (48 வயது), நா. கிருஷ்ணமூர்த்தி (25 வயது), மு. திருவாசகம் (42 வயது), ஆ. தபேந்திரராசா (22வயது) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

## விசேட கூட்டம்

கைதானோர் காணாமற் போனோர் பாதுகாவலர் சமிதியின் விசேட கூட்டம் நாளை சனிக்கிழமை மாலை 2.00 மணியளவில் சங்கப் பணிமனையில் நடைபெறும்.

## கிரனேட் வீச்சு

நேற்று முன்தினம் இரவு 9.00 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியில் கிரனேட் வீச்சு இடம்பெற்றது. அருகில் இருந்த கடை ஒன்றின் முன்பகுதி இதனால் சிறிது சேதமடைந்தது. (இ-117)

### மகேஸ்வர...

(முதலாம் பக்கத் தொடர்)

யும் இரசாயனத்துறைத்தலைவருமான சி. மகேஸ்வரனின் பூதவுடல் நேற்று யாழ். பல்கலைக்கழக இரசாயனவியற் துறை மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பெருந்திரளான மாணவர்களும் விரிவுரையாளர்களும் இதில் கலந்து கொண்டு மலர் வளயம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கொழும்பில் காலமான இவரது உடல் நேற்று இராணுவ விமானம் மூலம் பலாலிக்கு எடுத்து வரப்பட்டது. அங்கிருந்து இராணுவ அம்புலன்ஸில் மதியம் ஒருமணியளவில் இரசாயனவியல் மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டது.

விஞ்ஞானமாணவர் சங்கத்தினர் ஒழுங்கு செய்திருந்தவாறு அங்குவைத்து அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

நாளை சனிக்கிழமை வரை பூதவுடல் அவரது வீட்டில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஞாயிற்றுக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

நேற்று நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் இராணுவ அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர். (இ-9)

### வேலை வாய்ப்பின்மை...

(ஏழாம் பக்கத் தொடர்)

வதற்கு நடத்தப்படும் நேர்முகப்பரீட்சை 1995 ஆம் ஆண்டில் விண்ணப்பங்கள் கோரி குடாநாட்டில் பெரும் இடம்பெயர்வு பெற்ற தருணத்தில் 1996 இல் தென்மராட்சியில் நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள் அடிப்படையிலேயே செய்யப்படுகின்றது. இடம் பெயர்வு காரணமாக ஏராளமான விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக்கு தோற்றவில்லை. வேலைவாய்ப்பில்லாமல் இன்று ஆயிரக்கணக்கானோர் இருக்கையில் காலம் கடந்த பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தெரிவு செய்வது, விண்ணப்பித்து பரீட்சை எடுக்காதவர்களுக்கும், தற்பொழுது வேலையற்றிருப்பவர்களுக்கும் இழைக்கப்படும் பெரும் அநீதி என்றே சொல்ல வேண்டும்.

அரசாங்கமும், சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளும் இவற்றைக் கவனத்தில் எடுத்து நிவாரணம் வழங்குவார்களா?

விரக்தி அடைந்த பெற்றோர்

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

## படையினரின் ஷெல் வீச்சால் மட்டக்களப்பில் 14 பேர் காயம்

யாழ்ப்பாணம், பெப். 6

மட்டக்களப்பு மண்முனைப் பிரதேசம் நோக்கி நேற்று முன்தினம் காலை படையினர் மேற்கொண்ட ஷெல் வீச்சில் 14 பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

இந்த ஷெல் வீச்சு காரணமாக மக்கள் பாதுகாப்பு இடங்களுக்கு இடம் பெயர்ந்தனர்.

காக்கையன் தீவுப்பகுதியில் வீழ்ந்த ஷெல்லுக்கு ஒரு குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-3)


## நன்றி நவிலல்

எமது தந்தையாராகிய

### சின்னத்தம்பி சுப்பிரமணியம்

அவர்களின் திடீர் மரணச் செய்தி கேட்டு எமது ஆற்றொணாத் துயரில் பங்கு கொண்ட மீசாலை இழக்கைச் சேர்ந்த நெல்லியடி கந்தசுவாமி கோயில், ஆலய பரிபாலன சபையினர்க்கும், மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர்கட்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி சுப்பிரமணியம் குடும்பம்

"ஸ்ரீரங்கம்",
மீசாலை.

(53146)



## அறிவித்தல்

### துணைவேந்தர் நிதியத்திற்காக "மலநீக்கம்" (நாடகம்)

தயாரிப்பு: நுண்கலைத்துறை யாழ். பல்கலைக்கழகம்

இடம்:- கைலாசபதி கலையரங்கம்

தவிர்க்க முடியாத காரணத்தால் முன்னர் நடக்கவிருந்த நிகழ்ச்சிகள் பின்வரும் திகதிகளில் நடைபெற உள்ளது.

07-02-98- 2-30 பி. ப. — 10-02-98 10-00 மு. ப.
08-02-98- 10-00 மு. ப. — 10-02-98 2-30 பி. ப.

நுழைவுச்சீட்டுக்கள் மண்டப வாயிலில்


பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்
யாழ். பல்கலைக்கழகம்.

(53148)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 16 — 08 — 1936



உதிர்வு: 07 — 01 — 1998

### அமரர் மாணிக்கம் பொன்னம்பலம்

(Drilling Foreman Irrigation Dept. Colombo.)

ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன
உங்கள் ஆருயிர் அன்புக்கு ஈடாகுமா
தேறுதல் சொல்ல தெய்வம் வந்தென்ன
உங்கள் திருமுகம் பார்த்தால் போதாதோ
ஆனதோ ஒரு மாதம் பாசமோ மாறாது
உங்கள் நினைவோ மறையாது
மீளாத்துயில் கொண்ட எங்கள்பாசப்பெருவிளக்கே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவன் பாதத்தில் எங்கள் கண்ணீர்ப்பூக்களைச்
சமர்ப்பித்து ஆறுதல் அடைகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

மனைவி, பிள்ளைகள்

பொற்பதி வீதி,
கொக்குவில்.

(49944)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

அனுபவம் உள்ள
ரீ மேக்கர் (Tea maker)
சுவீட்ஸ் மேக்கர் (Sweets maker)
ஆகியோர் தேவை.
நேரில் தொடர்பு கொள்ளவும்

**லிங்கன் கிறீம் ஹவுஸ்,**
119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(53124)


# கண்ணீர் அஞ்சலி

கலைப்பீட 3 ஆம் வருட பொதுக்கலை மாணவி

**திருமதி சிசிலியா லோகு**

அவர்களின் **தந்தையார்** காலமானதையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கின்றோம்.

3 ஆம் வருட. கலைப்பீட மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.

(53151)

# மரண அறிவித்தல்கள்

## சபாரட்ணம் ஜெயக்குமாரன்

சித்தன்கேணியை பிறப்பிடமாகக் கொண்ட சபாரட்ணம் ஜெயக்குமாரன் 04-02-98 இல் காலமானார்

அன்னார் காலஞ்சென்ற சபாரட்ணம் இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், சிற்றம்பலம், இந்திரா, சுப்பிரமணியம், சிவசோதி, தேவராணி, தனபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோஜியின் அன்புக் கணவரும், மீரா, சஜிரா, மதுரா, கபில் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற துரைசாமி முத்துலட்சுமி தம்பதிகளின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரள்ள ஜெயரட்ண மலர் சாலையில் இன்று (6-2-98) காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைக்காக அவரது சென்னை (இந்தியா) இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சூரியகுமார்
(மருமகன்)

A-2-11, செண். பேப்ஸ் பிளட்,
மோதர, கொழும்பு - 15
தொலைபேசி: 527420

(சி/2817)

## தம்பையா விஜயசிங்கம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர், அளவெட்டி)

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கில் வசித்துவருமான ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் தம்பையா விஜயசிங்கம் 5-2-1998 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. சிவசண்முகநாதன்
(ராசா)

தற்போதைய முகவரி:-
கலையரங்க முல் ஒழுங்கை,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(53159)

## வல்லிபுரம் கதிரவேலு கந்தசாமி

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மட்டக்களப்பு பெரியகல்லாறு 2 ஆம் குறிச்சியில் வசித்தவருமாகிய வல்லிபுரம் கதிரவேலு கந்தசாமி (சுகாதார திணைக்கள ஒப்பந்தகாரர்) 4 - 2 - 98 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கதிரவேலு இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், பெரியகல்லாற்றைச் சேர்ந்த மனோன்மணியின் அன்புக் கணவரும், தவராசா, தயாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கலாகரன் (நில அளவை உத்தியோகத்தர் ராகலை), தவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற திருமதி பாக்கியம் வினாசித்தம்பி (முன்னாள் தலைமை ஆசிரியை), திரு. வ. க. பொன்னம்பலம் (முன்னாள் வர்த்தகர் பதுளை), வ. க. சுப்பிரமணியம் (முன்னாள் வர்த்தகர் பதுளை), திருமதி அமிர்தவல்லி தர்மலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (6-02-98) பெரியகல்லாறு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பெரியகல்லாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வி. செல்வரட்ணம்
(இளைப்பாறிய தபால் அதிபர்)
(மருமகன்)

இல. 58, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

(53154)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06 02 98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


நெல்லியடி
**மஹாத்மா**
**வெண் திரையில்**
05 - 02 - 98 முதல்
முரளி - சூர்யா
நடித்த
★ காதலே நிம்மதி
காட்சிகள்:- 10-30, 2-30
(ப.நே.) (இ/2765)

எமது வீடியோ
CD வெளியீடுகள்!

❉ பொன் மனம்
❉ கிழக்கும் மேற்கும்
❉ நேசம்

ஓடியோ CD வெள்ளியீடுகள்!

★ கொண்டாட்டம்
★ வாய் ஜாலம்
★ உயிரோடு உயிராக

ஒரிஜினல் வெளியீடுகள்

★ ஈரமான ரோஜாவே
★ அசுரன்
★ சீமான்

**சுப்பஸோ வீடியோ**
**யாழ்ப்பாணம்.**
(சி/2820)

**பொருளியல் கல்லூரி**
நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
**பெண் லிகிதர்**
தேவை-
நகரை அண்டியோர் விரும்பத்தக்கது.
7-2-98 சனி காலை 8.30
நேரில் தொடர்பு கொள்க.
— நிர்வாகி
(49947)

**லிபேட்டி சினிமா**
அச்சுவேலி.
30 அடி அகலத் திரையில்
இன்று தொடக்கம் ஞாயிறு வரையும்
முரளி, சூர்யா,
ரஸ்சிகா
நடித்த
**"காதலே நிம்மதி"**
குடும்பச் சித்திரம்
(புதிய வெளியீடு)
பழைய நேரம்
10-30. 2-30.
(53059)

**பொருளியற்கல்லூரி**
நாவலர்றோட்-யாழ்ப்பாணம்
**A/L 2000**
சனி, ஞாயிறு 9 மணி

பொருளியல்
S. வரதராஜன்
வர்த்தகம்
முரளி
கணக்கீடு
வன்னியசிங்கம்
புள்ளிவிபரவியல்
கிரிதரன்
அளவையியல்
R. P. சர்மா
தமிழ்
மீரா
இந்துநாகரிகம்,
இந்துசமயம்
ஜோதீஸ்வரன்
நாடக, அரங்கியல்
கந்தவேள்
புவியியல்
இக்னேஷியஸ்

[illegible]
தொடர்பு கொள்ளவும்.
(49945)


# கண்ணீர் அஞ்சலி

## சபாரட்ணம் ஜெயக்குமாரன்

சபாரட்ணம் ஜெயக்குமாரன் காலமானதையிட்டு ஆழ்ந்த கவலையும், அதிர்ச்சியும் அடைவதுடன் அவரின் குடும்பத்தவர்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ராகம்ஸ் பட்டுச் சோலை,
24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

(சி/2818)

## சைவவித்தியாவிருத்திச் சங்கம்

# ஆண்டுப் பொதுக்கூட்டம்

நேற்றைய உதயனில் அறிவித்தபடி, எமது ஆண்டுப் பொதுக்கூட்டம் 08-02-98 இல் நடைபெறாது. பதிலாக, 14-02-98 சனிக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறும்.

சோ. பத்மநாதன்
செயலாளர்

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

(சி/2821)


லலிதா ரெக்ஸ்ரைல்ஸ்
வழங்கும்
**லலிதாவின் பாட்டுக்குப் பாட்டு**

மணிக்குரல் விளம்பர சேவையின் 25 ஆவது ஆண்டு (சில்வர் ஜூபிலி) விழாவை முன்னிட்டு யாழ். நகரில் கோலாகலமாக கொண்டாடப்படும் மணி விழாவின் கலை நிகழ்ச்சிகளில் முகூர்த்தப் பட்டுப் பிடவைகளின் முன்னோடிகளாய் திகழும்

லலிதா ரெக்ஸ்ரைல்ஸ் ஆதரவில்
**லலிதாவின் பாட்டுக்குப் பாட்டு**

இந்த நிகழ்ச்சியில் பங்குபற்ற விரும்பும் நேயர்கள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் மூலம் உடன் தொடர்புகொள்ளுங்கள். உங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 5 — 3 — 98 முன்பாக அனுப்பி வைக்கத் தவறாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:


**லலிதா ரெக்ஸ்ரைல்ஸ்,**
இல. 5. 6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்
மற்றும்
V. S. சற்குணன்,
**மணி வீடியோ,**
46, 3 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

விவரங்கள் பின்னர் பத்திரிகையில் அறிவிக்கப்படும்.

(53132)


# First Year Remembrance

Born
01 — 10 — 1923



Entered Glory
06 — 02 — 1997

## Thambiah Stephen Sabaratnam

A Year has Passed With Sorrow and Tears
Which His Beloved Wife, Children and
In - Laws Couldn't Bear
But His Love and Deeds, Knows no Bounds
To His Near and Dear Once in His Deeds.

Fondly Remembered by:
**His Ever Sorrowing Wife,**
**Children, Sons & Daughters in Law.**

(C/2819)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org